நிரு டியூசன் சென்ரர்
ஸ்ரேசன் றோட் கோண்டாவில்
A/L 91
நடைபெறுகின்றன
பௌதிகவியல் -- கணேசன்
இரசாயனவியல் — செல்வா
தாவரவியல் — பாலா
விலங்கியல் — தங்கராஜா
தூய, பிரயோக கணிதம் — கிருஷ்ணா

பக்கங்கள் எட்டு விலை ரூபா:- 3-00

முரசொலி

முரசு 04 ஒலி 92 செவ்வாய் 08-05-1890 (சித்திரை 25) ஷவ்வால் 12

நிரு டியூசன் சென்ரர்
ஸ்ரேசன் றோட் கோண்டாவில்
O/L 1990
DAY CLASS
7-5-90 திங்கள் முதல் ஆரம்பமாகியுள்ளது.

★ தமிழர் விடுதலைக் கூட்டணிச் சின்னத்தில் தெரிவான ஈ. பி. ஆர். எல். எப். எம். பி

# சாம் தம்பிமுத்து சுட்டுக்கொலை

# கனடா விஸா பெற செல்கையில் சூடு

## மனைவி ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில்

தமிழர் விடுதலைக் கூட்டணி மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினரும் ஈ.பி.ஆர்.எல்.எப் இன் முக்கிய அங்கத்தவருமான சாம் தம்பிமுத்து நேற்று பிற்பகல் கொழும்பு கறுவாக்காட்டுப்பகுதியில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார்.

நேற்று பிற்பகல் ஒன்றரை மணியளவில் சாம்தம்பிமுத்து தனது மனைவி சகிதம் கிறகரி வீதியில் உள்ள கனடா தூதரகத்திற்கு வந்து கொண்டிருந்த போதே சுட்டுக் கொல்லப்பட்டார். கனடா செல்வதற்கு விஸா பெறும் பொருட்டு இவர் தூதரகத்திற்கு வந்ததாகத் தெரியவருகிறது.

அவரின் கார் தூதரகத்தின் அண்மையில் வந்து கொண்டிருக்கும் போது திடீரென மோட்டார் சைக்கிள் ஒன்றில் வந்த மூன்று ஆயுதபாணிகள் சாம் தம்பிமுத்துவின் காரை நோக்கிச் சரமாரியாக துப்பாக்கி பிரயோகம் செய்ததாகவும் தெரியவருகிறது இதில் சாம்தம்பிமுத்து ஸ்தலத்திலேயே பலியானார். மனைவி திருமதி கலா தம்பிமுத்து படுகாயமடைந்தார். இவர் தற்போது ஆஸ்பத்திரியில் அவசர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். அவரின் நிலை ஆபத்தாகவே இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி துப்பாக்கி சூட்டில் காரின் சாரதி காயம் எதுவும் இன்றி தப்பி கொண்

— 8ஆம் பக்கம் பார்க்க

### உகண்டாவிலிருந்து வந்தவர்

## யாழ் வைத்தியசாலையில் ஒரு புதிய எயிட்ஸ் நோயாளி

யாழ் போதனா வைத்தியசாலையில் மீண்டும் ஒரு எயிட்ஸ் நோயாளி அனுமதிக்கப்பட்டுள்ளார். இங்கு நடைபெற்ற இவரது வைத்திய பரிசோதனையில் இருந்து இவர் ஒரு எயிட்ஸ் நோயாளிஎனத் தெரிய வந்துள்ளது. வழமையில் இங்குநடைபெறும் யாழ் வைத்திய பரிசோத

→ 8ஆம் பக்கம் பார்க்க

### முரசொலி செய்தியால் பலன்

## பாஸ்போர்ட் விண்ணப்பப்படிவம் யாழ் அலுவலகத்தில் பெறலாம்

முரசொலியில் வெளிவந்த செய்தியையடுத்து கூடியளவு பாஸ்போர்ட் விண்ணப்பப்படிங்களை யாழ் செயலகம் விநியோகிப்பதற்கான நடவடிக்கை எடுத்துள்ளது.

தற்போது கொழும்பில் இருந்து 500 பாஸ்போர்ட் விண்ணபங்கள் அனுப்பப்பட்டு வருகின்றது. இது முடிந்த பின்னரே மீண்டும் இவ்விண்ணப்

— 8ஆம் பக்கம் பார்க்க

## ஓய்வூதிய வவுச்சர்

இம் மாதத்திற்குரிய ஓய்வூதிய வவுச்சர்கள் நேற்று சகலருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இன்று ஓய்வூதியம் பெறுவோர் தமது ஓய்வூதியங்களைப் பெற முடியுமெனத் தெரிவிக்கப்பட்டது. (03)

## புயலில் சிக்கிய தமிழக மீனவரை விடுதலைப் புலிகள் காப்பாற்றினர்

கடந்த வெள்ளி தமிழ்நாடு நாகபட்டினத்தில் இருந்து புறப்பட்ட நான்கு தமிழக மீனவர்கள் வடமராட்சியில் நேற்றுக்காலை கரை ஒதுங்கியுள்ளனர்.

கடந்தவெள்ளிஇவர்கள்கடலுக்கு சென்றபோது வங்காள விரிகுடாவில்ஏற்பட்டபலத்த காற்றினால் இவர்கள் நடுக்கடலுக்கு இழுத்துச் செல்லப்பட்டனர்.

கடலில் தத்தளித்த இவர்களில் ஒருவர் பின்னர் இந்தியப் படகு ஒன்றினால் மீட்கப்பட்டுள்ளார்.

மிகுதி நான்கு பேரும் தற்போது விடுதலைப் புலிகளி

— 8 ஆம் பக்கம் பார்க்க

## யாழ். மாவட்டப் பாடசாலைகள் வெள்ளிக்கிழமை அரைநேரம்

எதிர்வரும் 11ம் திகதி வெள்ளிக்கிழமையாழ் மாவட்டப் பாடசாலைகள் யாவும் ஒரு மணியுடன் மூடப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது

தமிழர் ஆசிரியர் சங்கத்தின் முன்னாள் தலைவர் திரு.டி எஸ்.கே. வணசிங்க சுட்டுக் கொல்லப்பட்ட தினத்தை முன்னிட்டே பாடசாலைகள் அரைநேரமாக இயங்கவுள்ளன.

அன்றையதினம் மாலை 2 மணிக்கு யாழ் இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் அஞ்சலிக்கூட்டம் ஒன்று இடம் பெறவுள்ளது.(03)

## உள்ளூராட்சி தேர்தலில் 3 விருப்பு வாக்குகளையும் ஒரே வேட்பாளருக்கு அளிக்க சட்டத்திருத்தம்

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் ஒவ்வொரு வாக்காளரும், முதற் தடவையாக விருப்பமான ஒரு வேட்பாளருக்கே தனது மூன்று விருப்பு வாக்குகளையும் அளிக்க வழி செய்யப்பட இருக்கின்றது.

இதற்கான சட்ட மூலம் விரைவில் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படவுள்ளது.

தற்போதுள்ள சட்டத்தின் கீழ் விருப்புரிமை வாக்குகளை மூன்று வேட்பாளர்களுக்கே அளிக்க முடியும் ஆனால் நடைபெற இருக்கும் உள்ளூராட்சித் தேர்தல்களில் ஒவ்வொரு வாக்காளரும் தனக்கு விருப்பமான கட்சிக்கு முதலில் வாக்களிக்க வேண்

— 8ஆம் பக்கம் பார்க்க

## அலரிவிதை தற்கொலைகள் தீவுப்பகுதியில் அதிகரிப்பு

தீவுப்பகுதியில் அலரி விதை உட்கொண்டு மரணமடைவோரின் தொகை அதிகரித்துள்ளது. அண்மைக் காலங்களில் பலர் இவ்வாறு மரணமடைந்துள்ளனர். பலர் தீவிர சிகிச்சைக்குப் பின்னர் காப்பாற்றப்பட்டுள்ளனர்.

இப்பகுதிகளில் வீட்டிற்கு வீடு அலரி மரங்கள் காணப்படுகின்றன. பிரச்சினைகளால் ஆத்திரமடைவோர் அலரி விதையுடன் சர்க்கரை சேர்த்து உட்கொண்டு தற்கொலை செய்ய முயற்சிக்கின்றனர்.

← 8 ஆம் பக்கம் பார்க்

## யாழ் மாநகரசபை புனரமைப்பு 30 லட்சம் ரூபா நிதி வருகிறது

யாழ் மாநகர சபை புனரமைப்புக்கும். உள்ளூராட்சி மன்றப் புனரமைப்பிற்கும் மேலும் 50 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இப் பணம் அடுத்தவாரத்தினுள் யாழ் செயலகத்தை வந்தடையவுள்ளது. 30லட்சம் ரூபா யாழ் மாநகர சபைக்கும் 20 லட்சம் ரூபா உள்ளூராட்சி மன்றங்களுக்கும் வழங்கப்படவுள்ளது. (03)

## சூறாவளி அபாயம நீங்கியது எனினும் கடல் கொந்தளிப்பு

வங்காள விரிகுடாவில் தோன்றிய சூறாவளி மையம் தற்போது இலங்கையை தாக்கும் அபாயம் நீங்கி விட்டதாக வானிலை அவதான நிலையம் அறிவித்துள்ளது.

— 8ஆம் பக்கம் பார்க்க

## மாவட்ட ரீதியில் நியமனம் பெற்ற வடகிழக்கு ஆசிரியர்களின் வேறு மாவட்ட இடமாற்றம் ரத்து

வடக்கு கிழக்கு மாகாணத்திலுள்ள மாவட்ட அடிப்படையில் நியமனம் பெற்ற ஆசிரியர்கள் வேறு மாவட்டங்களுக்கு உடனடியாக இடமாற்றம் செய்யப்பட மாட்டார்கள். எனினும் மாவட்ட சேவைத் திட்டத்தில் நியமனம் பெற்ற ஆசிரியர்களின் 5வருட சேவை முடிந்தவர்களை யாழ் மவட்டத்திற்கும். 4 வருட மாவட்ட சேவை முடிந்தவர்களை ஏனைய மாவட்டத்திற்கும் இரண்டாம் தவணை முடிவில் இடமாற்றம் செய்யப்படுவார்கள்

மேற்படி முடிவு கடந்த சனிக்கிழமை வடக்கு கிழக்கு மாகாண அமைச்சில் நடைபெற்ற இடமாற்றச் சபை கூட்டத்தில் எடுக்கப்பட்டதாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர்

... 8 ம் பக்கம் பார்க்க

வல்வை முத்துமாரி அம்மன்தேர்

சிறப்பு மலர்



இன்று 08-05-90 செவ்வாய்க்கிழமை காலை 9-00 மணியளவில் சித்திரத் தேரேறி அடியார் குறை தீர்க்க வரும் அம்மாளுக்கு பணிவான எல்லோரதும் வணக்கங்கள். சகல மக்களும், நாடும் செழித்தோங்குக.

தாயே மகமாரி வருக
அருள் தருவாய் நிதமும்

ம. சங்கரசுந்திலிங்கம்
சமூக சேவையாளரும்,
குடும்பத்தினரும்

05058


## பளை ஆஸ்பத்திரி அபிவிருத்திச் சங்கம்

(பளை)

பளை அரசினர் வைத்திய சாலை அபிவிருத்திச் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் மே ஒன்பதாம் திகதி பளை கோட்ட உதவி ஆணையாளர் சு. கந்தசாமி தலைமையில் நடை பெறவுள்ளது.

(ப. 3)

## யாழ். அரச அலுவலகங்களில் தமிழ் தட்டெழுத்தாளர் இல்லை

யாழ் மாவட்ட செயலகத்திலும் உதவி அரசாங்க அதிபர் பணிமனைகளிலும் தமிழ் தட்டெழுத்தாளர் பற்றாக் குறையுள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது.

யாழ் மாவட்டத்தில் உள்ள 14 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் 9 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் தமிழ் தட்டெழுத்தாளர்கள் இல்லை

யாழ் மாவட்ட செயலகத்திலும் தமிழ் தட்டெழுத்தாளர்கள் பற்றாக்குறை பெருமளவில் காணப்படுகின்றது. (03)


சிறுவிளம்பரம்

புத்தகம்

புதிய உயர்தர விலங்கியல் பகுதி II கரப்பான் தேரை விளக்கப் படங்களுடன் உள்ளடக்கிய அரிய நூல். ஆசிரியர் K. சங்கர்ஐயர் B. Sc வெளியீடு, விற்பனை பூபாலசிங்கம் புத்தகசாலை யாழ்ப்பாணம்.

05033

மீண்டும தையல்
பயிற்சி ஆரம்பம்

லேன் மோர்
டெயிலரிங்
இன்ஸ்ரிரியூட்டில்
புதிய மாணவர்கட்கு
அனுமதி
கோரப்படுகிறது.

தொடர்பு:
முத்துக்கிருஷ்ணர் வீதி,
சுன்னாகம்

05070

யூனிவேர்சல்
கந்தர்மடம் - யாழ்ப்பாணம்
பாடசாலை செல்லாத மாணவர்களுக்கான
O/L
பகல் முழுநேர வகுப்புகள்
DAY CLASSES
ஆரம்பம்
9-5-90 காலை 8.30

05049



உ
சிவமயம்

இரணைமடு
அருள்மிகு
ஸ்ரீ கனகாம்பிகை அம்பாள்
தேர் உற்சவம்

இரணைமடு கனகாம்பிகை அம்பாள் இன்று இரண்டாவது வருடம் புதுப்பொலிவுடன், சித்திரத்தேரில் பவனிவரும் அதேவேளையில் அற்புதக்காட்சியாக முருகனுக்கும் ஓர் சித்திரத்தேர் அமைத்து இன்று விநாயகர், அம்பாள், முருகன் ஆகிய மும்மூர்த்திகளும் மூன்று சித்திரத்தேரில் பவனிவரும் கண்கொள்ளாக்காட்சி வன்னி மாவட்டத்தில் வதியும் சைவ மக்களுக்கும், ஏன் யாழ். மாவட்டமே அதிசயிக்கும் கண்கொள்ளாக் காட்சி காண பாக்கியம் பெற்றவர்கள். 1989 வைகாசி மாதத்தில் ஆரம்பிக்கப்பட்ட தேர்த் திருப்பணி இன்றுடன் பூர்த்தியடைவதால் அம்பாளின் கருணையையிட்டு மெய்மறப்பதுடன் நாங்களும் அகமகிழ்கின்றோம். ஸ்தபதி சிற்பக் கலாமணி திரு. க. செல்வராசா குழுவினர் (திருநெல்வேலி யாழ்ப்பாணம்) இவ்விடயத்தில் அம்பாளுக்கு நல்கிய சேவை எம் மக்களால் மறப்பதற்கில்லை. சைவம் தளைத்தோங்க சிற்பக் கலை மென் மேலும் வளர அவர் நீடூழி காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

இத்திருப்பணிக்கு எந்தவித தயக்கமும் இன்றி வாரி வழங்கிய வள்ளல்கள் அனைவருக்கும் அம்பாளின் கருணை கிட்ட பிரார்த்திக்கின்றோம். அம்பாள் அடியார்கள் அனைவருக்கும் நன்றியை தெரிவிப்பதுடன் ஆலய வளர்ச்சிக்கு உங்கள் கருணையை நாடி நிற்கின்றோம். இம்முறை நடைபெற இருக்கும் தீர்த்த உற்சவம் மிகவும் சிறப்பம்சமாக அமைய இருக்கின்றது. இரணைமடு வாவியில் நீர் பெறும் இடங்களில் இருக்கும் ஆறு தெய்வங்கள் முறையே:-

(1) சேற்றுக் கண்டி அம்மன் - முரசுமோட்டை
(2) பன்னக் கண்டிப் பிள்ளையார் - அரசினர்பண்ணை வட்டக்கச்சி
(3) மாவடி முத்துமாரிஅம்மன் - இராமநாதபுரம்
(4) ரங்கநாத பெருமான் - மம்மின்குளம் வட்டக்கச்சி
(5) குளக்கட்டு மாணிக்கப்பிள்ளையார் - வட்டக்கச்சி
(6) முருகப்பெருமான் - கனகாம்பிகைகுளம்

மேற்படி ஆலயத்திற்கு வருகைதந்து சித்திரா பௌர்ணமி தினமாகிய 09.05.1990 புதன்கிழமை காலை 6.00 மணியளவில் இரணைமடு வாவியில் தீர்த்தமாடுதல் இந்த மாவட்டம் சிறப்புற, இரணைமடு வாவி நீர் நிறைந்து பொலிவுற தாய் அற்றவர்கள் தாயை நினைத்து விரதம் அனுஷ்டிக்க என்னும் எத்தனையோ நன்மைகள் கிட்ட உதவும் என நம்பும் அதே சமயம் இரணைமடு ஸ்ரீ கனகாம்பிகை அம்மாள் அருட்கடாட்சம் எல்லா மக்களுக்கும் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.

அ. பாலசுப்பிரமணியம்

05075

## 'ரமில்' தின விழா

இன்று இலங்கையிலுள்ள சகல பாடசாலைகளிலும் தமிழ்மொழித்தினம் கொண்டாடப்படுகிறது.

தமிழுக்குத்தானும் ஓர் அந்தஸ்து வழங்கியுள்ளதாகக் காட்டிக்கொள்ள இலங்கை அரசிற்கு இது ஒரு தினமாகும்.

இத் தினத்தைப் பிரகடனப் படுத்தியதோடு இலங்கை அரசின் கடன் முடிந்தது.

இன்றைய தினத்தில் வடக்கு - கிழக்குப் பாடசாலைகளில் தமிழ்த்தின விழாக்களை அதிபர்கள், ஆசிரியர்கள் நடத்துவார்கள்.

அத்தோடு அவர்களின் கடனும் முடிந்தது. மாவட்ட ரீதியில் நாடக, மெல்லிசை, பேச்சு, பண்ணிசை போன்ற போட்டிகளைக் கல்வித் திணைக்களங்கள் நடத்தும்.

அத்துடன் அவற்றின்கடமைகளும் முடிந்து விடும்.

இத்தோடு தமிழ் மொழியின் சிறப்பை எமது மாணவர்கள் நன்குணர்ந்து, தமிழ் மொழியில் நல்லறிவும் பாண்டித்தியமும் பெற்று விடுவார்கள் என நாம் நம்பலாமா?!

இலங்கையில் தாயக மொழியில் கல்வி கற்கும் வசதி வந்து பல வருடங்களாகி விட்டன.

ஆங்கில மொழி மூலம் பாடசாலைகளில் கல்வி கற்பித்தபோது தமிழ் ஒரு பாடமாக இருந்தது.

அப்போது சகல பாடங்களும் ஆங்கிலத்திலேயே இருந்ததால் ஆங்கில அறிவில் சகலரும் தேர்ச்சி பெற்றிருந்தனர்.

இதே சமயம் தமிழ்ப் பாடம் அப்போது ஒரே பாடமாக இருந்தாலும் இலக்கண அறிவுடன் வகுப்புகள், பாடத் திட்டங்கள் அமைந்திருந்தன.

இதனால், ஆங்கில மொழி மூலம் கல்வியிருந்த போது தமிழ், ஆங்கிலம் இரு மொழிகளிலும் மக்கள் தேர்ச்சி பெற்றிருந்தனர்.

தற்போது தமிழ்மொழி மூலம் கற்பித்தல் இடம் பெற்றாலும் தமிழ், ஆங்கிலம் இரண்டிலும் மாணவர்கள் தேர்ச்சி பெற்றதாகத் தெரியவில்லை.

இதற்காக மீண்டும் ஆங்கில மொழி மூலம் கற்பித்தல் வேண்டும் என நாம் இங்கு வலியுறுத்தவில்லை.

தமிழ், ஆங்கிலம் இரண்டிலுமுள்ள பாட விதானங்களை இலக்கண முறையில் மாற்றியமைத்து மாணவர்கள் பாண்டித்தியம் அடைந்தவர்களாகப் பாடசாலைகளை விட்டு வெளியேற வேண்டும்.

மேலும், இன்று பேச்சு வழக்கில் ஆங்கிலச் சொற்கள் அதிகளவு தமிழோடு கலந்து விட்டன.

இவற்றை அப்புறப்படுத்துவதென்பது மிகவும் சுலபமான காரியமல்ல.

பாடசாலை மட்டத்திலிருந்து மாணவர்களுக்குப் புதுப்புதுத் தமிழ் சொற்களைப் புகுத்துவதன் மூலமே இதனைச் செய்யலாம்.

தமிழ் என்பது வெறுமனே பேச்சோடு, எழுத்தோடு நிற்பதல்ல.

எமது பாரம்பரிய கலை, கலாசாரங்களோடு தமிழ் மொழியானது பின்னிப் பிணைந்துள்ளது.

எமது மொழியை நாம் காக்க வேண்டுமாயின் எமது பாரம்பரிய கலை, கலாசாரங்களைப் பாதுகாத்து வளர்க்க வேண்டும்.

தமிழ்த் தின விழாவில் மட்டும் கலை, கலாசார நிகழ்ச்சிகளைப் பாடசாலைகளில் நடத்தாமல், மாணவர்களுடன் அவை ஒன்றிப்போகும் வண்ணம் களப்பயிற்சி, செய்முறை பாடவிதானங்கள் மூலம் தினசரி மாணவர்களுக்குப் புகுத்த வேண்டும்

## இதயநாதம்

செவ்வாய்க்கிழமை 08-05-1990

நலவாக்கு

மனத்தையும், உள்ளத்தையும் பரிசுத்தப் படுத்தும் ஞானம்தான் உண்மையான ஞானம். மற்றவை அஞ்ஞானம் ஆகும்.

-இராமகிருஷ்ணர்

ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம்

# அமைதிப்படை வரமுன் புலிகளின் கை ஓங்கியது

# அமைதிப்படை வந்த பின் புலிகளின் கைபலமடைந்தது

**இந்திய அமைதிப் படை இலங்கையில் இருந்து திரும்பியதைஒட்டி தமிழக முதலமைச்சர் மு. கருணாநிதி வெளியிட்ட கருத்துக்கள் பெரும் சர்ச்சைக்குள்ளாகின. இதுகுறித்து சட்டமன்றத்தில் விவாதம் நடந்தது. இதன் எதிரொலி பாராளுமன்றத்திலும் கேட்டது. இந்திய அமைதிப் படை, விடுதலைப் புலிகள் குறித்து 'இந்தியா ருடே' செய்தியாளர் ஆனந் விஸ்வநாதனுக்கு தமிழக முதலமைச்சர் மு. கருணாநிதி அளித்த பிரத்தியேகப் பேட்டி இங்கு முழுமையாகப் பிரசுரமாகிறது.**

கேள்வி: இந்திய அமைதிப் படைவெளியேறிவிட்ட பிறகு, இலங்கையின் எதிர்காலம் எப்படி இருக்கும் என்று நினைக்கிறீர்கள்?

பதில்: எதையும் உறுதியாகச் சொல்கிற நிலையில் நான் இல்லை. நடந்த சம்பவங்களில் இருந்து ஜனாதிபதி பிரேமதாசா ஏதாவது படிப்பினை கற்றுக்கொண்டு இருப்பாரானால், தமிழர்களோடு நட்புக்கொள்ள கிடைத்த எந்த வாய்ப்பையும் தவற விடக்கூடாது. அதே நேரத்தில், விடுதலைப் புலிகள் ஜனநாயகப் பாதைக்குத் திரும்பியிருக்கிறார்கள் என்பது வரலாறு படைக்கும் நிகழ்ச்சி. ஜனாதிபதி பிரேமதாசாவிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே இனிமேல் பிளவு ஏற்படாது என்றே நம்புகிறேன்.

கே: விடுதலைப் புலிகள் என்ற ராணுவ அமைப்பால் அவர்கள் கேட்கும் தனி நாட்டை ஜனநாயக ரீதியில் ஆளமுடியுமா?

ப: அமைதிப்படை அங்கே செல்வதற்குமுன்னால் தமிழ்ப் பகுதிகளின் மொத்த நிர்வாகமும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் தான் இருந்தது. அமைதிப்படை விலகியதற்குப் பிறகு அது மறுபடியும் அவர்கள் கையில் வந்திருக்கிறது. விடுதலைப் புலிகள் ஜனநாயகப் பாதையை ஏற்றுக் கொள்வதாக அறிவித்திருக்கிறார்கள். மக்களும் அவர்களை ஆதரிக்கிறார்கள். வேறு என்ன வேண்டும்?

கே: அமைதிப்படை திரும்பி வந்தபோது நீங்கள் ஏன் அதை வரவேற்கச் செல்லவில்லை என்பது பற்றி வெளிப்படையாகப் பேசியிருக்கிறீர்கள். ஆனால், நீங்கள் வரவேற்பில் கலந்து கொண்டபிறகு உங்கள் கருத்தை வெளியிட்டு இருந்தால் நன்றாக இருந்திருக்கும் என்று நீங்கள் நினைக்கவில்லையா?

## "நாஜிகளின்ஜேர்மனியில்தான் அதுபோல் எல்லாம் நடக்கும்"

ப: யாரையும் தர்மசங்கடத்திற்கு ஆளாக்க வேண்டாம் என்ற எண்ணத்திலேயே நான் வரவேற்பில் கலந்து கொள்ளவில்லை. எங்கள் கருத்து என்ன என்பது எல்லோருக்கும் தெரியும். அமைதிப்படை தமிழர்களைக் கொல்வதற்காகப்பயன்படத் துவங்கியதில் இருந்தே அது தேச நலனுக்காக நடத்தப்படும் யுத்தம் இல்லை என்பதையும், இது இந்தியாவிற்கு ஒரு வியட்நாம் என்றும் நான் சொல்லி வந்திருக்கிறேன். இதே கருத்தை நமது எம். பி. க்கள் பாராளுமன்றத்தில் பலமுறை சொல்லியிருக்கிறார்கள். நமது ராணுவ வீரர்கள் எந்த மக்களைக் காப்பதற்காகச் சென்றார்களோ அந்த மக்களிலேயே 5,000 பேரைக் கொன்று, இலங்கையின் வடக்கு—கிழக்குப் பகுதிகளில் பெரும் பகுதியை இடித்துப் பாழ்படுத்தினார்கள். இவற்றில் ஈடுபட்டபோது 1,800 வீரர்கள் உயிரிழந்தார்கள் என்பதையெல்லாம் கேள்விப்பட்ட போது இதயத்தை முறுக்கிப் பிழிவது போல் இருந்தது. ராணுவத்தை மதிப்பது என்பது ஒன்று, நான் ராணுவத்தை மதிக்கிறேன். ஆனால், சொல்வதற்குக் கசப்பான அதே சமயம் உண்மைக்குப் புறம்பானதென்று நிராகரிக்க முடியாத விஷயங்களை மறந்து நாம் அவர்களைத் தொழத் துவங்குவோமேயானால், அது ஜனநாயகத்திற்கு நல்லதல்ல. நாஜிகளின் ஜேர்மனியில்தான் அது போல் நடக்க முடியும்.

கே: அமைதிப்படை திரும்பிவிட்டதால் தமிழகக் கடலோரப் பகுதிகளைப் போராளிகளின் நடவடிக்கைகளுக்குத் திறந்து விட்டது போல் ஆகிறதே? கடலோரப் பகுதிகளைப் பாதுகாக்க இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்து வருகிறது? சமீபத்தில் மீனவர்கள் இரண்டு முறை விடுதலைப்புலிகளால் கடத்தப்பட்டது கவலை தருவதாக இருக்கிறதே?

ப: நமது எல்லா கடலோரப் பகுதிகளும் எப்போதும் திறந்தே கிடக்கின்றன. ஈழம் இப்போது விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கிறது. மற்றப் போராளிகள் இந்தியாவுக்குள் இருக்கிறார்கள். நிலைமை மாறியிருக்கிறது. ஆனால், இலங்கையில் மோசமாக ஏதாவது நடந்தால் அதன் எதிரொலிதமிழகக் கடலோரப் பகுதிகளில் கேட்கும். கடலோரப் பகுதிகளைப் பாதுகாக்க வேண்டியது மத்திய அரசின் கடமை. மீனவர்கள் கடத்தப்பட்டது குறித்து ஒன்று சொல்ல விரும்புகிறேன் மீன் பிடிப்பதற்காக அவர்களது எல்லைகளைக் கடந்து செல்வது என்பது மீனவர்களிடம் ஒரு வழக்கமாக இருந்து வருகிறது. விடுதலைப்புலிகள் சம்பந்தப்பட்ட சமீபத்திய சம்பவங்கள் குறித்துக் கவலைப்பட வேண்டியதில்லை. வரலாற்றுச் சிறப்புமிக்க நமது கடற்பகுதிகள் குறித்து இலங்கை அரசுடன் ஒரு ஒப்பந்தம் இருக்கிறது. இருந்தாலும் சில சமயங்களில் இது போல்நடந்து விடுகிறது. நாம் கூட வெகுகாலத்திற்கு முன் பல்ல தைவானிலிருந்து வந்த மீனவர்களைச் சிறை வைத்திருக்கிறோம். மிகவும் உணர்ச்சிபூர்வமான ஒரு விஷயத்தைநாம் புரிந்து கொள்ள வேண்டும். நாமெல்லோரும் தமிழர்கள் தான். ஆனால் வேறுவேறு தேசத்தைச் சேர்ந்தவர்கள்.

கே: சில அகதிகளுக்குத் தமிழ் நாட்டில் அனுமதி கொடுக்கமறுத்து அவர்களை ஒரிஸாவிற்கு அனுப்பியது நியாயம்தனா? அவர்களும் தமிழர்கள் தானே?

ப: அகதிகளை வரவேற்கும் தாராளகுணம் தமிழ் நாட்டிற்கு எப்போதும் உண்டு. 1983 ல் இருந்து ஒரு லட்சம் அகதிகள் வந்திருக்கிறார்கள். அவர்களில் 17,000 பேர்பதிவு செய்யப்பட்டு முகாம்களில் இருக்கிறார்கள். மற்றவர்கள் தமிழ்நாட்டின் பலபகுதிகளில் வசித்து வருகிறார்கள். கடந்த மூன்று மாதங்களில் சுமார் 3,000 அகதிகள் மண்டபத்துக்கு வந்திருக்கிறார்கள். இப்போது கப்பலில் வந்தவர்கள் பெரும்பாலனவர்கள் போராளிகள் என்று நான் சொல்வேன். நாம் எல்லோருக்கும் தெரிந்த காரணங்களினால் முந்தைய அரசு சில வாக்குறுதிகள் கொடுத்து அதற்காக அவர்களை இந்தியாவிற்கு அழைத்து இருக்கலாம். அவர்கள் தமிழகத்துக்கு வந்தால் அவர்களைப் பழிவாங்க அவர்களது எதிரிகள் இங்கே வந்து மோதக் கூடும். நான் தமிழ்நாட்டை மற்றொரு பஞ்சாபாகவோ, காஷ்மீராகவோ மாற்றவிருப்பவில்லை.

கே:ராமநாதபுரத்தில்சமீபத்தில் ஆயுதங்கள் கண்டுபிடிக்கப்பட்டது அந்தப் பகுதியிலே



இருக்கிற மக்களுக்கு அச்சத்தை ஏற்படுத்தியிருக்கிறது. ஆயுதங்கள் வந்தபோது ஏன் பொலிசார் அவற்றைத் தடுக்கவில்லை.

ப: முதவில் ஒருவிஷயத்தை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். அமைதிப்படையின் 'நண்பர்களுக்கும்'', அதனோடு 'ஒத்துதுழைத்தவர்களுக்கும்' தாராளமாக ஆயுதங்கள் முந்தைய அரசால் அனுப்பப்பட்டன. தேசிய முன்னணி அரசு பதவியேற்றதும்தான் இது நிறுத்தப்பட்டது. இருந்தபோதிலும்

> ''உண்மைக்குப் புறம்பானதென்று நிராகரிக்க முடியாத விடயங்களை மறந்து நாம் அவர்களைத் தொழத் துவங்குவோமேயானால் அது ஜனநாயகத்திற்கு நல்லதல்ல,,

— 7 ஆம் பக்கம் பார்க்க.

## விளையாட்டுச் செய்திகள்

### 'முரசொலி' சைக்கிளோட்டப்போட்டி

வவுனியா புதுக்குளம் சித்திவிநாயகர் விளையாட்டுச்கழகம் சிற்றூரவையின் ஆதரவுடன் நடாத்தும் 12-வது மாபெரும் 115 மைல்மரதன் சைக்கிள் ஓட்டப் போட்டி 19 ம் திகதி காலை7 மணிக்கு மேற்படி கழக முன்றலில் ஆரம்பமாகும்.

வடக்கு கிழக்கு மாகாண ரீதியில் நடைபெறும் இப்போட்டியில் பங்குபற்ற விரும்புவோர் முற்கூட்டியே விண்ணப்பித்து தங்களுக்குரிய அதிர்ஷ்ட இலக்கங்களைப் பதிவு செய்து கொள்ளல் வேண்டும்.

வெற்றிபெறும் முதலாவது வீரருக்கு 'முரசொலி! பத்திரிகை ஸ்தாபனத்தினால் புதிய சாளி மோட்டார் சைக்கிள் பரிசாக வழங்கப்படும். இரண்டாவது வீரருக்கு தொலைக்காட்சிப் பெட்டியும், மூன்றாவது வீரருக்கு புதிய சைக்கிளும் பரிசாக வழங்கப்படும் போட்டியில் வெற்றிபெறும் எட்டு வீரர்களுக்கு விலையுயர்ந்த பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

வெளியிடங்களிருந்து வரும் வீரர்களுக்கு முதல் நாள் தங்குமிட வசதி செய்து கொடுக்கப்படும் விண்ணப்பங்கள் 17-ம் திகதிக்கு முன்னர் அனுப்படல் வேண்டும்.

### கிளி.யிலிருந்து கொழும்புக்கு

அகில இலங்கை ரீதியாக கொழும்பில் நடைபெறும் 6 ஓவர் மென் பந்து கிரிக்கட் சுற்றுப் போட்டியில் கலந்து கொள்வதற்கு 9 பேர் கொண்ட விளையாட்டுக் கோஷ்டி ஒன்று கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து கொழும்பு சென்றுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து கொழும்பு செல்லும் முதலாவது கிரிக்கெட் கோஷ்டி இது என்பது குறிப்பிடத்தக்கது. இக்கோஷ்யின் கப்டனாக திரு. கோபுதாஸ் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

### விரிவுரையாளர் அணி வெற்றி

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக விரிவுரையாளர் அணிக்கும். கல்வி சாரா ஊழியர் அணிக்குமிடையிலான மென்பந்துகிரிக்கட் போட்டியில் விரிவுரையாளர் அணி வெற்றி பெற்றது. ஸ்கோர் விபரம்:

விரிவுரையாளர்: 15 ஓவரில் 5 விக்கட்டுகளுக்கு 78 ஓட்டங்கள் (கிருபாகரன் 21 முரளிதரன் 17)

கல்வி சாரா ஊழியர்: 6.4 ஓவரில் 15 ஓட்டங்கள் (பாலேந்திரா 5 விக்கட்டுகள், பார்த்திபன் 4 விக்கட்டுகள்)

விரிவுரையாளர்களுக்கும், கல்வி சாரா ஊழியர்களுக்கும் இடையில் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ள 5 போட்டிகளைக்கொண்ட தொடரில் இது முதலாவது போட்டியாகும். இரண்டாவது போட்டி நேற்று நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

இப்போட்டிகள் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியிலமைந்துள்ள பட்டப் படிப்புகள் கல்லூரியின் ஆதரவில் நடைபெறுகின்றது, இப்போட்டியில் பரிசளிக்கப்படவுள்ள வெற்றிக் கேடயத்தையும், வெற்றிக் கிண்ணங்களையும் பட்டப் படிப்புகள் கல்லூரி இயக்குநர் அன்பளிப்புச் செய்யவுள்ளார்.

### கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி

வவுனியா புதுக்குளம் சித்திவிநாயகர் விளையாட்டுக் கழகம் சிற்றூர் அவையின் ஆதரவுடன் நடாத்தும், 12 வது ஆண்டு 4 பேர் கொண்ட 30. நிமிட நேர ஒரு நாள் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி 19 ஆம் திகதி சனிக்கிழமை காலை 7மணிக்கு புதுக்குளம் சித்தி விநாயகர் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

இப்போட்டி அகில இலங்கைக்கரப்பந்தாட்ட பொது விதிளுக்கு அமைய நடைபெறும். போட்டியில் எத்தனை பிரிவுகளும் பங்கு பற்றலாம். ஒரு பிரிவிற்கு பிரவேசப்பணம் ரூபா 30 (முப்பது) செலுத்த வேண்டும். போட்டிகள் யாவும் கழக மைதானத்தில் நடைபெறும்.

போட்டிகள் யாவும் நான்கு பேர் கொண்டதாகவும் 30 நிமிட நேரமாகவும் இருக்கும், இந்த 30 நேரத்தில் கூடிய புள்ளிகளைபெறும் கழகம் வெற்றியீட்டியதாகக் கருதப்படும். போட்டியில் கலந்து கொள்ளும் கழகங்கள் யாவும் தங்கள் கரப்பந்துகளுடன் குறிப்பிட்ட நேரத்தில் சமுகம் தரவேண்டும். இச்சுற்றுப்போட்டி 19.05.90 சனிக்கிழமை காலை 7 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை நடைபெறும். விண்ணப்பம் 10 திகதிக்கு முன்னர் அனுப்ப வேண்டும்.

### மாவை விக்டரி சாம்பியன்

வலி வடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில், பதிவு செய்த கழகங்கட்கு இடையே நடத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெட் போட்டியில் இறுதி ஆட்டம் அண்மையில் நடைபெற்ற பொழுது, மாவை விக்டரி விளையாட்டுக் கழகம் அதனை எதிர்த்து ஆடிய, மல்லாகம் கிராம அபிவிருத்திச்சங்கஅணியை 19 ஓட்டங்களால் தோற்கடித்து வலி வடக்கு உதவி அரசாங்க பிரிவு சாம்பியன் ஆனது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மாவை விக்டரி கழக அணி 5 ஓவர்களில் 46 ஓட்டங்களைப் பெற்றது. தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்க அணி சகல விக்கற்றுகளையும் 5 ஓவர்களில் இழந்து 27 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது.

### விக்னேஸ்வரன் ஞாபகார்த்த உதைபந்தாட்டம்

உரும்பிராய் திருக்குமரன் சனசமூக நிலையத்தினர் 4 வருட இடைவெளியின் பின், அமரர் க. விக்னேஸ்வரன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்திற்காக 7 வீரர்கள் பங்கு பற்றும் உதை பந்தாட்ட சுற்றுப் போட்டி ஒன்றினை நடத்தவுள்ளனர். (61)

'அப்பே ஆண்டுவ' நடைமுறை

# தனிச் சிங்களத்தில்தான் அம்பாறை அரசு அலுவல்

அம்பாறையில் கச்சேரி உட்பட அரச அலுவலகங்களில் அலுவல்கள் சிங்கள மொழியில் மேற்கொள்ளப்பட்டு வருவதால் அம்மாவட்டத்தில் உள்ள தமிழ், சிங்கள மக்கள் பெரும் இன்னலுறுகின்றனர்.

இந்நிலை தொடர்பாக வடக்கு, கிழக்கு மாகாண சபையின் முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் ஜனாப் ஏ.எல். அப்துல்மஜீத் பொது நிர்வாக மாகாண சபைகள் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் திரு. பெஸ்டஸ் பெரேராவிடம் புகார் செய்துள்ளார்.

அவர் அமைச்சருக்கு எழுதிய கடிதம் ஒன்றில் பின்வருமாறு கூறியுள்ளார்.

தமிழ் மொழிக்கு அரசகரும மொழி அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது.

ஒரு பிரஜை அவர் விரும்பிய மொழியில் அரசாங்கத்துடனான தமது அலுவல்களை மேற் கொள்ள முடியும் என அரசு கூறுகிறது.

ஆனால் இங்குஇக் கூற்றுக்கு மாறாக கருமங்கள் நடைபெறுகின்றன.

அம்பாறை மாவட்டத்தில் காணப்படும் இக் குறைபாடு தொடர்பாக அரசாங்க அதிபருக்குப் பலமுறை அறிவித்துள்ளேன். ஆனால் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டதாகத் தெரியவில்லை.

12 வருடங்களாக தமிழ் மொழி அமுலாக்கல் அமைச்சு ஒன்று இந்நாட்டில் இயங்கி வருகிறது.

ஆனால் தமிழ்மொழி அரச கரும மொழியாக அமுலாவதில்லை.

எனவே அந்த அமைச்சு ஒரு குழுவை அமைத்துத் தமிழ் மொழி அமுலாக்கலைக் கண்காணித்து வரவேண்டும்

# தமிழகக் கலைஞர் வருகைக்கு உற்சாகம் அளிக்கப்படும்

மே தினத்தன்று கொழும்பில் நடைபெற்ற தமிழக இசைக்கலைஞர்களின் நிகழ்ச்சிகள் பெரும் வெற்றியளித்துள்ளதால் மேற் கொண்டும் தமிழக கலைஞர் குழுக்களை இலங்கைக்கு வரவழைக்க ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.

இத்தகவலை தகவல்துறை ராஜாங்க அமைச்சர் திரு.ஏ. கே.ரணசிங்க வெளியிட்டார்.

தரமான தமிழ்த் திரைப் படக்களும் விரைவில் இறக்குமதி செய்யப்படும் என்றும் அவர் சொன்னார்,

ரூபவாஹினி தொலைக்காட்சிச் சேவையில் தமிழ் நிகழ்ச்சிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும் இதற்கான உத்தரவு கூட்டுத் தாபனத்துக்கு விடுக்கப்பட்டுள்ளது என்ற தகவலையும் அவர் தெரிவித்தார்.

# விடுதலைப் புலிகளுடன் பேச்சு இந்திய மீனவர்குழு வருகிறது

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சு வார்த்தை நடாத்துவதற்காக இந்திய மீனவர்சங்கத்தூதுக்குழுஒன்று இலங்கை வரவுள்ளது,

இலங்கை மீனவர்களுடனான வேறுபாடுகள் குறித்து விடுதலைப் புலிகளுடன் பேசி இணக்கம் காண்பதற்கென இராமேஸ்வரத்தில் உள்ள வேர்கொட்டு மீனவர் சங்கத் தூதுக்குழுவே விரைவில் தலைமன்னார் வரவுள்ளது.

இலங்கை கடல் எல்லைக்குள்சிலர்மேற்கொண்டதவறான நடவடிக்கைகளுக்காகஇராமேஸ்வரத்தில் உள்ள முழு மீனவ சமுதாயத்தையும் தண்டிப்பது நேர்மையானதல்ல என புலிகளுக்கு எடுத்துக்கூறி நம்பவைக்க மேற்படி தூதுக்குழு முயற்சிக்கும் என்று சென்னைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# மது அருந்தும் அமைச்சர்கள் பதவி நீக்கம் செய்யப்படுவர்

### ஜனாதிபதி பிரேமா அறிவிப்பு

மதுபானத்துக்கு அடிமையான அமைச்சர்களும். எம். பிக்களும் தத்தமது பதவிகளை ராஜினாமாச் செய்ய வேண்டும்.

இவ்வாறு ஜனாதிபதி திரு. ஆர்.பிரேமதாஸ பணித்துள்ளார்,

விருந்து வைபவங்களிலோ அல்லது வீடுகளிலோ மது அருந்துவதையும் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

தகவல்துறை ராஜாங்க அமைச்சர் திரு. ஏ. ஜே. ரணசிங்க கொழும்பு பௌத்தலோக மாவத்தையில் உள்ள பௌத்த நிலையத்தில் நடைபெற்ற வைபவத்தில் பேசுகையில் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

### சுவிசேஷ கூட்டம்

தெய்வீக சுகமளிக்கும் சுவிசேஷக் கூட்டம் 8-ம் 9-ம் 10-ம்திகதிகளில் பிற்பகல் 3 மணிக்கு சுண்டுக்குளி மகளிர் கல்லூரிக்கு எதிரில் நடைபெறவுள்ளது.

கெத்செமனே சுவிசேஷ சபைப் போதகர் ஜி.ராஜமணி சுவிசேஷ செய்தியைப் பகிர்ந்தளிப்பார்.

இசையும் இதில் இடம் பெறும்.

### இரணைமடுக்குளம் திறந்து விடப்பட்டது

(கிளிநொச்சி)

இரணைமடு குளத்திலிருந்து 90ம் ஆண்டுக்கான சிறு போக நெற்செய்கைக்கு தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது.

இம்முறை கண்டிப்பான பங்கீட்டு முறைப்படியே கமக்காரர்களுக்கு வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (35)

திருநெறிய தெய்வீக மாநாடு:

### நாளை விரிவுரை பண்ணிசை, பரிசளிப்பு

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தின் திருநெறிய தெய்வீக மாநாட்டில் இன்று திருமுறை முற்றோதல் நிறைவுபெறும்.

நாளைய நிகழ்ச்சிகள் யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெறும்.

பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் திரு. சோ. பத்மநாதன் விரிவுரையாற்றுவார்.

இயல், இசை. நாடகப் போட்டியில் வெற்றிபெற்றோருக்கான பரிசில்களும் வழங்கப்படும்.

பரிசில்களை 'முரசொலி, ஆளுநர் நாயகம் திரு. எம். சிவராசா சார்பாக பண்டிதர் சரவணபவனார் வழங்குவார்.

சங்கீதபூஷணம் கே. ஆர். நடராஜா பண்ணிசை நிகழ்த்துவார்.

பிரான்ஸில் இலங்கை

### அகதிகளுக்கான சலுகை குறைப்பு எனத்தகவல்

இலங்கையில் அமைதி நிலவுவதாகக் கூறி பிரான்ஸில் இலங்கை அகதிகளிக்கான சலுகைகள் குறைக்கப்படுகின்றன என்றுதெரிவிக்கப்படுகின்றது.

அகதிகளுக்கான அத்தாட்சிப்பத்திரம் கொடுப்பதும் குறைக்கப்பட்டு வருகிறதாம்.

விடுதலைப்புலிகள் - அரசு

# பேச்சுவார்த்தைகளைக்குழப்ப தென்பகுதியில் சிலர் முயற்சி

## - அன்ரன் பாலசிங்கம் எச்சரிக்கை

(வடமராட்சி)

'தென்னிலங்கையில் இன்னமும் இனவாதத் தீ சுடர்விட்டு பிரகாசித்துக் கொண்டிருக்கின்றது. பிரேமதாசாவை ஆட்சியில் இருந்து அப்புறப்படுத்தவும், அரசுக்கும் எமக்கும் இடையே நடை பெற்று வரும் பேச்சுவார்த்தையைக் குழப்பி விடவும் முனைப்பாக ஈடுபட்டு வருகின்றது. இந்த நிலையில் மக்களாகிய நீங்கள் ஏனோ தானோ என்ற நிலைமையை விடுத்து விழிப்பாக இருக்க வேண்டும்.''

இவ்வாறு வடமராட்சியில் சுடரொளி சனசமூக நிலையத்தால் நடாத்தப்பட்ட கப்டன் மோகன் மாஸ்டர், லெப்டினன் முரளி, இளம்புலி பட்சம் ஆகியோரின் 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் குறிப்பிட்டார்.

சுடரொளி விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்ற மேற்படி கூட்டத்திற்கு திரு. என். நாகநாதன் தலைமை வகித்தார். திரு. அன்ரன்பாலசிங்கம் அங்கு தொடர்ந்து பேசுகையில்,

'எமது இயக்கம் இன்று ஒரு மாபெரும் மக்களியக்கமாக மாறி வருகின்றது. இந்நிலையில் அனைத்து மக்களும் அணிதிரண்டு எமது சுய நிர்ணய உரிமையை வென்றெடுக்க முன்வரவேண்டும். அப்போதுதான் எமது மண்ணிற்காகவும், மக்களுக்காகவும் மரணித்த வீரவேங்கைகளின் ஆத்மா சாந்தியடையும்'' என்றார்.

விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் யாழ். மாவட்டப் பொறுப்பாளர் ஸ்ரான்லி டொமினிக் பேசுகையில்: 'நாம் பலமாக இருப்பதனால் தான் இலங்கையரசு எம்மோடு பேச்சு நடாத்தி வருகின்றது. எனவே எமது பலத்தை நாம் மென்மேலும் வளர்த்துக்கொள்ள வேண்டும். நாம் பலமிழப்போமாயின் இலங்கையரசு ஜே. வி. பி. போல எம்மையும் அழித்தொழிக்கத் தயங்கமாட்டாது' என்றார். (44)

## யாழ் குடா நாட்டு ஆலயங்களில் இயந்திரத் திருட்டு அதிகரிப்பு

யாழ் குடா நாட்டின் ஆலயங்களில் இயந்திரத் தகடுகள் திருடும் முயற்சிகள் அண்மைக் காலத்தில் அதிகரித்துள்ளது.

கடந்த இரு வார காலப் பகுதியில் சுன்னாகம் மயிலணி முருகமூர்த்தி கோயிலிலும், மாவிட்டபுரம் தலையாட்டி வைரவர் ஆலயத்திலும் விக்கிரகங்களை புரட்டி இயந்திரத் தகடுகளை திருட முயன்ற திருடர்கள் இயந்திரத் தகடுகள் பித்தளை என்பதால் கைவிட்டுச் சென்றுள்ளனர்.

இதேபோன்று அளவெட்டி குருக்கள் கிணற்றடி பிள்ளையார் ஆலயத்திலும் இத்திருட்டு நடைபெற்றுள்ளது.

## கோப்பாயில் முத்தமிழ் மன்றம்

(கோப்பாய்)

கோப்பாய் மத்தி முத்தமிழ் கலாமன்ற அங்குரார்ப்பணக் கூட்டம் அண்மையில் நாவலர் வித்தியாலத்தில் த. கிருபாகரன் தலைமையில் நடைபெற்றது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் கலை கலாசாரப் பேரவையின் ஆதரவில் நடைபெற்ற இக்கூட்டத்தில் நடப்பு வருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர். சு. மகேஸ்வரன். செயலாளர். த. கிருபாகரன். பொருளாளர் மு. விக்னேஸ்வரன். உபதலைவர் சு' இராமலிங்கம். உபசெயலாளர். வை. குணசேகரம். இத்துடன் பதினொருபேர் கொண்டநிர்வாகக்குழுவும் தெரிவு செய்யப்பட்டது. (23)

## கிளிநொச்சியில்போலித்தராசுகள் விவசாயக்கோள்வனவில்மோசடி

கிளிநொச்சி நகர் சந்தைப் பகுதியில் தவறான நிறை காட்டும் தராசுகள் பாவித்தும் விலை மோசடி செய்தும் வியாபாரிகள் நீண்ட காலமாக செய்து வருகின்றனர்.

விவசாயிகள் உற்பத்தி செய்யும் விளைபொருட்களை சந்தைக்கு கொண்டு வரும் போது சந்தைக்கு மிக அண்மித்த பகுதியில் சில வியாபாரிகள் நின்று உற்பத்தியாளர்களிடம் இடைமறித்து பொருள் கொள்வனவு செய்வர் அப்போது தவறான தராசுகளும் நியாயமற்ற விலையும் பிரயோகித்து வியாபாரிகள் பெரும் மோசடி செய்து வருகின்றனர். (35)

## 5000 கிராமோதய சபைகளும் மக்கள் அமைப்புக்களாக மாறும்

கிராமோதய சபைகளை புனர் நிர்மாணம் செய்ய சட்ட வரவில் விரைவில் திருத்தம் கொண்டு வரப்படும். சபை நிதியத்திடம் இதற்கான ஆலோசனைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

இதன் மூலம் கிராமோதய சபைகளை கிராமமட்ட மக்கள் அமைப்புக்களாகமாற்ற முடியுமெனவும் இதுவரையில் 5000 கிராமோதய சபைகள் தோற்றுவிக்கப்பட்டன என்றும் உள்ளூராட்சி சபை ஆணையாளர் திரு.எஸ்.ஏ ஜினதா'சா தெரிவித்தார்.

## யாழ். நங்கை காதலனுடன் ஓட்டம்; பிரான்ஸில் சம்பவம்

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நங்கை ஒருத்தி கணவனுடனான மணவாழ்க்கை விட்டு புதிய காதலுடன் சென்றுவிட்ட சம்பவம் பிரான்ஸில் நிகழ்ந்துள்ளது.

இரு வருடங்கள் கணவனுடன் வாழ்ந்த இவரது புதுக் காதலன்இவரது உறவினர்என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

மன்னார் எழுதுவினைஞர் சங்கம் கோரிக்கை

## மகாதேவா தாம்போதி வேலையும் முடிக்கவேண்டும்; மறிச்சுக்கட்டி - புத்தளம் பாதையும் திறக்கவேண்டும்

(மன்னார்)

''பொது எழுதுவினைஞர் சேவையிலுள்ளோருக்கான இடமாற்றச்சபைகள் உடனடியாகவே மீளவும் இயங்க வைக்கப்பட்டு, இடமாற்றத்திற்கு உரித்துடைய சகல எழுதுவினைஞர்களும், ஆகக்குறைந்தது 1991 ஜனவரி முதலாம் தேதி முதலேனும் இடமாற்றம் பெறக்கூடியவாறு இடமாற்றக் கட்டளைகள் பிறப்பிக்கப்பட வேண்டும், முடக்கி வைக்கப்பட்டுள்ள, வாழ்க்கைச் செலவுப் படிக் கொடுப்பனவு மீண்டும் நடைமுறைப்படுத்தப் படுவதுடன், உயர்கின்ற ஒவ்வொரு சுட்டெண்ணின் பொருட்டும் ரூபா 10 வீதம் வழங்கப்பட வேண்டும்.

இவ்வாறான தீர்மானங்களை அரசாங்க எழுவினைஞர்சங்கமன்னார்கிளை நிறைவேற்றி உள்ளது. இத் தீர்மானங்கள் இம் மாதம் 21ஆம் திகதி நடைபெறவுள்ள அரசாங்க எழுதுவினைஞர் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் விவாதித்து நிறைவேற்றுவதற்காக எடுக்கப்பட்டுள்ளன.

மன்னார் மாவட்டத்தையும் யாழ். மாவட்டத்தையும் இணைக்கும் மகாதேவா தாம்போதியில் எஞ்சியுள்ள சிறுபகுதி வேலையை மேலும் தாமதமின்றி உடனடியாகச் செய்துமுடித்து போக்குவரத்தை விரைவுபடுத்த வேண்டுமெனவும், வவுனியாவுக்கும் செட்டிகுளத்துக்கும் இடையே புகைவண்டிப் பாதையொன்றை அமைப்பதன் மூலம், மன்னாரிலிருந்து யாழ். செல்வதற்கான பயணத்தை இலகுவாக்க வேண்டுமெனவும், மறிச்சுக்கட்டி—புத்தளம் பாதையை பொதுப் போக்குவரத்துக்குத் திறந்துவிடுவதன் மூலம் மன்னார்—கொழும்பிற்கான போக்குவரத்தை எளிதாக்க வேண்டுமெனவும்அரசைக் கோருவது.

சேவையிலிருந்து ஓய்வு பெற்றோருக்கு வழங்கப்படும் விடுமுறைப் பயணப் புகைவண்டி ஆணைச் சீட்டுக்களின் தொகை இருமடங்காக அதிகரிக்கப்பட்டுள்ளமையால், சேவையிலுள்ளோருக்கான அளவும் அதிகரிக்கப்பட வேண்டுமென அரசைக் கோருவது, போன்ற தீர்மானங்களும் அங்கு எடுக்கப்பட்டன.

இத்தீர்மானங்களைத் தவிர மேலும் பதினான்கு தீர்மாளங்களும் நிவைவேற்றப்பட்டன. (17)

# செய்தி மஞ்சரி

## கோட்டைக்கு வெளியே வரும்

இதுவரை காலமும் யாழ் கோட்டைக்குள் இருந்த யாழ் பொலிஸ் அதிபர் அலுவலகம் மக்களின் நலன் கருதி ஓரிரு வாரங்களில் வெளியே இடமாற்றம் செய்யப் படவுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

கோட்டைக்குள் இவ் அலுவலகம் இருப்பதால் பொது மக்கள் அங்கு சென்று தம் வேலைகளை மேற்கொள்வதற்த அசௌகரியம் ஏற்பட்டுள்ளதை நீக்கும் முகமாகவே இங்கு அலுவலகத்தை மாற்றுவது எனத் தீர்மானிக்கபப்ட்டது.

## கல்முனையில் மினிசூறாவளி

கல்முனை நகருக்கு அண்மையில் மினி சூறாவளியினால் காரஜ் ஒன்றின் கூரை தூக்கி வீசப்பட்டதோடு வீடுகளின் ஓடுகளும் வீசப்பட்டன. இச்சூறாவளியினால் தென்னை மரங்களும் பெருமளவு சாய்ந்தன. இலேசான மழைத் தூறலுடன் காலநிலை இன்னமும் மப்பும் மந்தாரமுமாகவே உள்ளது

## 50 தொலைபேசி இணைப்பு

வெளி இடங்களுக்கான தொலைபேசி அழைப்புக்களை பெறக்கூடியமுறையில் 50 தொலைபேசி இணைப்புக்களை முல்லைத்தீவு நகருக்கு வழங்குவதற்கான வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

இதற்கென முல்லைத்தீவு அஞ்சல் அலுவலகத்தில் கிளை 'எக்ஸ்சேஞ்' ஒன்றை அமைப்பதற்குரி உபகரணங்கள் வந்துள்ளன.

தற்போது முல்லைத்தீவு அஞ்சல் அலுவலகம் மற்றும் அரசாங்க அதிபர் அலுவலகம் அகியவற்றிற்கு இரண்டு நேரடி தொலைபேசி வசதிகள் மட்டுமே வழங்கப்பட்டு செயற்பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

## நிர்வாக அலுவலர் போட்டிப்பரீட்சை

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் நிர்வாக உத்தியோகத்தர்களைத் தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கடந்த 20 ஆம் திகதி வெளியான விசேட வர்த்தமானி மூலம் இதற்கான விண்ணப்பங்சள் கோரப்பட்டுள்ளன. இவ் விண்ணப்பங்களை இம்மாதம் 14ம் திகதிக்கு முன்பதாக அனுப்புமாறு கேட்கப் பட்டுள்ளது.

## அவுஸ்திரேலியாவில்தமிழ்வானொலி

அவுஸ்திரேலிய வானொலி தமிழ் நிகழ்ச்சிக்கென வாரம் ஒரு முறை அரை மணி நேரத்தை ஒதுக்கியுள்ளது.

அவுஸ்திரேலியாவில் வாழும் தமிழ் மக்களின் நலன் கருதி ஈழத் தமிழ்ச்சங்கம் இலங்கைத் தமிழ்ச் செய்திகளை வாரம் தோறும் அரை மணித்தியாலம் ஒலிபரப்பி வருகின்றது ஞாயிறு தோறும் கூட்டங்கள் நடத்தியும், வெள்ளி தோறும் முருகன் பஜனை, கூட்டுப் பிரார்த்தனைகள் போன்றவற்றைச் சிறப்பான முறையில் நடத்தியும் தமிழருக்குத் தமிழ்ப் பணி செய்வதில் இங்குள்ள பத்துத் தமிழ்ச் சங்கங்களும் மிக உறுதுணையாக உள்ளன.

சிட்னியால் வெளிவரும் மாதத் தமிழ் ஏட்டிற்குச் 'சிட்னித் தமிழ்க் குரல்'' எனப் பெயரிடப் பட்டுள்ளது. இங்குள்ள சிட்னி, மெல்போர்ன் ஆகிய மாநிலங்களில் சுமார் இருபதாயிரம் ஈழத் தமிழர்கள் வாழ்கின்றனர் என்பது குறிப்பிடத் தக்கது.

## கொழும்பில் வெசாக் பந்தல்கள்

வெசாக் தினத்தை முன்னிட்டு கொழும்பிலும், அதனைச் சுற்றியுள்ள பிரதேசங்களிலும் வெசாக் அலங்காரப் பந்தல்கள் மிகப் பெரியளவில் நிர்மாணிக்கப் பட்டு வருகின்றன.

லேக் ஹவுஸ், விமானப் படைத் தலைமையகம் ஆகியவற்றிற்கு முன்னால் பாரிய வெசாக் கூடுகள் அமைக்கப் பட்டுள்ளன.

பல வருடங்களுக்குப் பின்னர் நாடு முழுவதும் இம்முறை வெசாக் பந்தல்கள் பெருமளவில் அமைக்கப் பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

## சிந்தாமணி விநாயகர் உற்சவம்

வவுனியா வெளிவட்ட வீதி சிந்தாமணி விநாயகர் ஆலய தேர்த் திருவிழா மே 8 ஆம் திகதியாகும்.

சென்றமாதம் 30 ஆம் திகதி திங்கட்கிழமை கொடியேற்ற விழாவுடன் ஆரம்பமாகி மே 10 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை வைரவ சாந்தியுடன் விழா நிறைவு பெறும் என ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர்,

ஆலய உற்சவ நாட்களில் தினமும் மாலை 7 மணிக்கு ஆசிரியர் திரு. செ. குணபாலசிங்கம் அவர்கள் விநாயகர் பெருமை என்னும் பொருள் பற்றி சொற்பொழிவாற்றுவார். (11)

## புதிய நெல் வகை

சிறுபோகச் செய்கைக்கு உகந்த சிறந்த இனமும் வட பகுதி மக்கள் விரும்பி உண்ணும் இனமென சிவப்பு அரிசி இனத்தைச் சேர்ந்த ஓ.ரி. 85% இன நெல் வகை ஒன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

குறைந்தளவு உரத்தைப் பாவித்து, கூடிய விளைச்சலைத் தரக் கூடிய இனம் இது வென்றும், எரிபந்த நோயினால் பாதிக்கப் பாடாத ஒரு நெல்லினம் என்றும் கண்டு பிடிக்கப் பட்டுள்ளது.

3 முதல் $3\frac{1}{2}$ மாத காலப் பயிரான ஓ.ரி 85% ரக நெல் ஏக்கருக்கு 125 புசல் விளைச்சலைத் தரக் கூடியது.

## முரசொலிக்கு வந்த கடிதம்

# மடை திறந்த வெள்ளம் போல் சலியாது புகைவிடும் வாகனங்கள்

ஆசிரியர்
முரசொலி

நரி தன்னை எதிரிகள் துரத்தும்போது தன் காலால் மண்ணைக் கிளறியபடி ஓடுமாம். ஏனெனில் புழுதியினூடாக எதிரி அதனைப் பார்க்க முடியாது என்பதால். இப்போது யாழ்ப்பாணத்தில் வித்தியாசமான 'நரிகள்' உலவுகின்றன. ஆம், 'லொறி' களும் 'மினிபஸ்' களுமே அவை.

சிலவேளை இவை சென்ற வீதிகளை அவற்றிலிருந்து வெளிவரும் புகை அடைத்துக் கொள்கிறது. இதனால் பின்னால் வரும் வாகனங்கள் தாம் இருப்பது பூமியிலா, விண்ணுலகிலா என ஐயுற நேர்கிறது. இவ்வாறு மடைதிறந்த வெள்ளம் போல் மனஞ்சலியாது புகைவிடும் வாகனங்களின் சிறப்பம்சம் என்னவெனில் அவற்றிற் பெரும்பாலானவை 24 சிறி ... 29 சிறி... தொடரிலக்கமிடப்பட்டிருப்பதே.

வாகனங்களிலிருந்து வெளியேறும் புகையிலுள்ள மாசுக்களான காபனோரொக்சைட் (Co), காபனீரொட்சைட் ($Co_2$, காபன்(C) மற்றும் ஈயத்துணிக்கைகள் மனிதகுருதிச் சுற்றோட்டத்தையும் மனிதமூளையையும் வெகுவாகப் பாதிக்கின்றன. இவற்றின் விளைவுகள் இன்னுஞ் சிறிது காலத்தில் பயங்கரமாக உணரப்படுவதைத் தடுப்பதற்கு யாழ்வாழ் அறிவுஜீவிகள் ஆவன செய்ய மாட்டார்களா?

தெல்லிப்பழை — ச. திலீபன்

# 'சம்திங்' கொடுத்தால் உடன்; இல்லையென்றால் வருடம்செல்லும்

ஆசிரியர்
முரசொலி

பிறப்புச் சான்றிதழ் ஒரு அத்தியாவசிய ஆவணமாகும். ஆனால் அதைப் பெற்றுக்கொள்வது பகீரதப் பிரயத்தனமாக உள்ளது.

இன்று யாழ் மாவட்டத்தில் கச்சேரி வேலைகள் ஐந்து நாட்கள் ஆக்கப்பட்டபின்னும் இந்நிலை நீடிப்பது கவலை தரும் விடயமாகும். காரியாலயச் செயற்பாடுகள் ஒழுங்காக நடைபெற்றால் இத்தகைய தொருநிலை ஏற்பட இடமில்லை

தெரிந்த ஒருவர் கச்சேரியில் வேலை பார்ப்பவராக இருந்தால் அடுத்தநாளே ஏன் விண்ணப்பம் கொடுத்த அன்றே பத்திரம் கைக்குக் கிட்டும் வாய்ப்பு உள்ளது. ஆனால் முறையாக விண்ணப்பிக்கும் ஒருவருக்கு வருடங்கள் சென்றாலும் பத்திரம் கிட்டாது. அது அவருக்கு அவசியம் தேவைப்பட்டால் 'சம்திங்' கொடுத்து சடுதியில் பெற்றுக் கொள்கிறார். சம்திங்குக்கு சடுதியாக வேலை நடைபெறும்போது சாதாரணமாக நடைபெறும் வேலையைத் துரிதப்படுத்தினால் என்ன?

நயினாதீவு — ம. கமலதாஸ்

### வன்செயலால் பாதிக்கப்பட்ட

# யாழ் மாநகர சபைக்கு இதுவரை நிவாரணம் இல்லை

யாழ் மாநகரசபைக்கு கடந்த கால வன்செயல்களில் ஏற்பட்ட நிதியிழப்பிற்கு இதுவரை அரசு எவ்வித உதவியும்வழங்கவில்லை.

புனருத்தாரண வேலைகளுக்கு மட்டுமே தற்போது அரசு யாழ் மாநகரசபைக்கு நிதி ஒதுக்கி வருகின்றது. இச்சபைக்கு ஏற்பட்ட நிதியிழப்பிற்கு இதுவரை அரசு எவ்வித நிதியுதவியும் வழங்கவில்லை.

இந்த நிதியிழப்பிற்கான நிதியை பெறுவதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (03)

# சகல தமிழ்ப் பாடசாலைகளிலும் இன்று தமிழ்மொழித்தினம்

நாடெங்கிலும் உள்ள தமிழ்மொழிப் பாடசாலைகளில் இன்று தமிழ் மொழித்தினம் கொண்டாடப்படும்

இத்தினத்தை முன்னிட்டு பாடசாலை மட்டத்திலிருந்து மாகாண மட்டம் வரை நடத்தப்பட்ட போட்டி முடிவுகள் மே 25 ஆம் திகதிக்கு முன்னர் கல்வி ராஜாங்க அமைச்சின் தமிழ் மொழிப்பிரிவுக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் எனவும் மாகாண பணிப்பாளரினால் அனுப்பப்பட்டுள்ள சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சுன்னாகம் வர்த்தக நிலையங்கள் இரவு 8 மணிவரை திறப்பு

சுன்னாகம் பகுதியில் சகல வர்த்தக ஸ்தாபனங்களும் இரவு எட்டு மணிவரை திறக்கப்படவுள்ளது. சனி விடுமுறை நாட்களில் வர்த்தக ஸ்தாபனங்கள் இரண்டு மணிவரை திறந்திருக்கும்.

விடுதலைப் புலிகளின் சுன்னாகப் பிரதேச பொறுப்பாளர் சிவா இது தொடர்பான பணிப்பை விடுத்துள்ளார். (ப.2)

### கிளிநொச்சி விவசாயிகளுக்கு

# பசளை கொள்வனவு செய்ய வட்டியில்லாக் கடன் 3மாதத்தில் செலுத்தாவிடின் வட்டி அறவிடப்படும்

கிளிநொச்சி சிறுபோக விவசாயத்திற்கு பசளை வகைகளை கொள்வனவு செய்ய வட்டியில்லாக் கடன் வழங்க மக்கள்வங்கி முன்வந்துள்ளது.

மக்கள்வங்கி முகாமையாளர்கள் உதவி அரசாங்க அதிபர்களுடன் நடாத்தப்பட்ட கலந்துரையாடலின் போது கிளிநொச்சி அரசாங்க அதிபர் கே. மாணிக்கவாசகரின் வேண்டுகோளையடுத்து இதற்கு இணக்கம் காணப்பட்டது.

இக்கடனைப்பெற ஆகக்கூடியது 5 ஏக்கரில் விவசாயம் செய்யப்படவேண்டும். அரை ஏக்கரில் உருளைக்கிழங்குச் செய்கை மேற்கொள்ள வேண்டும்.

முன்பு கடன்பெற்று மீளச் செலுத்தாதவர்களும் விண்ணப்பிக்கலாம். புதியகடனைப் பெற்று 180 நாட்களில் மீளச் செலுத்தாது விட்டால் 2 சதவீத வட்டி அறவிடப்படும். இவ்வாறு வங்கி வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேநடவடிக்கை முல்லைத்தீவு, மாங்குளம் மக்கள் வங்கிகளிலும் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (38

# புதிய கட்டிடம் அங்குரார்ப்பணம்

கரம்பொன் வடக்கு மாதர் கிராம முன்னேற்றச் சங்கத்திற்கான புதிய கட்டிடம் ஒன்று அங்குராப்பணம் செய்து வைக்கப்பட்டது.

இதன் தலைவர் திருமதி யோ. தவமணி எடுத்துக் கொண்ட அயரா முயற்சியினால் இப்புதிய கட்டிடம் அமைக்கப்பட்டு,பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபரின் பாரியார் திருமதி ஸ்ரெல்லா சீவரத்தினத்தினால் மங்கள விளக்கேற்றி அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

# மயிலணி வித்தியாலய நூலகத்திற்கு நூல்கள் தேவை

மயிலணி சைவ மகாவித்தியாலய நூலகத்திற்கு புதிய நூல்களை சேர்க்கும் முயற்சிகள் மேற்படி பாடசாலை அதிபர் சு. துரைசிங்கத்தினால் எடுக்கப்பட்டுள்ளன. இவ்வாண்டு பாடசாலைபவள விழா கொண்டாட்டங்களுடன் இவ் நூலகத்திற்கு 1000நூல்கள் சேர்க்கும் திட்டமும் நடைமுறைப்படுத்தப் படும். கதை,கவிதை, நாடகம், கட்டுரை உள்ளிட்ட புதிய, பழைய நூல்களை பாடசாலைக்கு அன்பளிப்பாக எவரும் வழங்கமுடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# யாழ் வைத்தியசாலை மலசல கூடம்

யாழ் போதனா வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவில் உள்ள மலசல கூடம் எவரும் பாவிக்க முடியாத நிலையில் உள்ளது.

தினமும் மாலை வேளையில் இந்தமலசல கூடம் முன்னால் நீர் தேங்கியுள்ளது. இந்த நீர்த் தேக்கத்தைத் தாண்டி பெண்கள், முதியவர்கள் செல்ல முடியாதுள்ளது. அத்துடன் துர்நாற்றமும் அவ்விடத்தை நெருங்க முடியாமல் தடுக்கின்றது.

# உணவு முத்திரை வழங்கப்படுகிறது

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் புதிய ஐந்தாவது சுற்று உணவு முத்திரைகள் அவ்வப்பகுதி கிராம சேவை அலுவலர்களினால் வழங்கப்பட்டு வருகின்றது.

ஒவ்வொரு கிராம சேவை அலுவலர் பிரிவிலுள்ள குழந்தைகளுக்கு புதிய உணவு முத்திரைகள் மண்ணெண்ணெய் முத்திரை இல்லாத குடும்பங்களுக்கு மண்ணெண்ணெய் முத்திரை ஆகியன வழங்குவதற்குரியநடவடிக்கைகள் கிராமசேவை அலுவலர்களினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (18)

# அராலி குலனை விவசாயிகள் கால்நடைகளால் நஷ்டம்

அராலி, குலனை ஆகிய கிராமங்களிலுள்ள விவசாயிகள் பலர் கட்டாக்காலி கால்நடைகளால் பெரும் கஷ்டத்தையும் நஷ்டத்தையும் அனுபவித்து வருகின்றனர்.

இங்குள்ள விவசாயிகள் தமது காணிகளில் செய்கை பண்ணப்பட்ட எள்ளை அறுவடை செய்ய முன்னர் கட்டாக்காலி ஆடு மாடுகள் இந்த எள்ளுப்பயிரைத்தின்றுதீர்த்து விடுகின்றனவாம்.

காலபோகத்தின் போது எள்ளை விதைத்து அவற்றைக் கிளிகளிடமிருந்து பாதுகாத்து வந்த இந்த விவசாயிகளுக்கு கட்டாக்காலி ஆடு மாடுகளால் பெரும் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகக் கவலை தெரிவிக்கின்றனர்.

இப்பகுதிகளில்உள்ள பயிர்ச் செய்கை உத்தியோகத்தர்கள், கிராமசேவை அலுவலர்கள், கட்டாக்காலி ஆடு மாடுகள் குறித்து உடன் நடவடிக்கை மேற்கொண்டு விவசாயிகளுக்கு ஏற்படும் நஷ்டத்தைத் தவிர்த்துக்கொள்ளுமாறு பொதுமக்கள் கேட்டுள்ளனர் (12)

### வீதி அபிவிருத்திசபை தலைவர்உறுதி

# முல்லை. மாவட்டத்தில் உள்ள முக்கிய 4 வீதிகள் திருத்தப்படும்

(மாங்குளம்)

முல்லைத்தீவு மாவட்டவீதிகளை வீதி அபிவிருத்தி அதிகார சபைத் தலைவர் என். பி. எஸ். பெர்னாண்டோ தலைமையிலான உயர் அதிகாரிகள் குழு அண்மையில் நேரில்பார்வையிட்டது.

முல்லைத்தீவு செயலகத்தில் அரசாங்க அதிபர் கே. பொன்னம்பலம் திட்டமிடல் பணிப்பாளர் தர்மகுலசிங்கம்ஆகியோருடன்வீதி அதிகார சபைஉயர் அதிகாரிகளுடனும் வீதித்திருத்தம் பற்றிய கூட்டம் ஒன்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில் முக்கிய தேவைகளும் அதில் ஏற்படுகின்ற தடைகளும்பற்றிஆராயப்பட்டது. படுமோசமான நிலையிலுல்ல முல்லைத்தீவு-புதுக்குடியிருப்பு வீதி,முல்லைத்தீவு- மாங்குளம் வீதி, மாங்குளம்-வெள்ளாங் குளம் வீதி ஒட்டுசுட்டான்- நெடுங்கேணி வீதிகளை திருத்துவதற்கு தேவையானநடவடிக்கைகளும் அங்கு எடுக்கப்பட்டன

## சுவையான செய்திகள்

# ஓடாத கார் யாருக்கு வேண்டும்

பிரபல கார் தயாரிப்பாளர்களான ஒரு மோட்டார்ஸ் நிறுவனம் ''நோவோ செவர்லே'' என்ற புதிய காரைத் தயாரித்தது. அவற்றை தென் அமெரிக்க நாடுகளில் விற்பனைக்குக் கொண்டு வந்து பெரிய அளவில் விளம்பரம் செய்தும் அந்தக் கார்கள் அதிகம் விற்பனையாகவில்லை.

காரணம் என்ன தெரியுமா? தென் அமெரிக்க மொழியான 'ஸ்பானிஷ்' மொழியால் 'நோவா' என்றால் ஓடாது என்ற பொருளாம். ஓடாத கார் யாருக்கு வேண்டும்?

# நன்றாகக் கோப்பி குடியுங்கள்

தேநீர், கோப்பி போன்ற பானங்களை அருந்துவது ஆயுளைக் குறைக்கும், உடல் நலத்தைக் கெடுக்கும் என்று நாம் இதுவரை அறிந்திருந்தோம். அண்மையில் சுவிற்சர்லாந்தில் ஒரு சுகாதாரக் கழகம் இதற்கு மாறான ஒரு அறிவிப்பை வெளியிட்டுள்ளது. ஆய்வுகளை மேற்கொண்ட இந்தக் கழகம் பின்வருமாறு கூறுகிறது:-

'ஒருவர் எவ்வளவுக்கு எவ்வளவு கோப்பியைக் குடிக்கிறாரோ அவ்வளவுக்கு அவரின் மூளைக்கு உத்வேகம் ஊட்டப்படுகிறது. இதனால் அவர் பல வேலைகளை இலகுவாகச் செய்ய முடிகின்றது'.

# போரின் காரணம் தெரியுமா?

முதலாம் உலகப் போர் ஏற்படக் காரணம் என்னவென்று உங்களுக்குத் தெரியுமா? 'சொபியா' என்னும் நாட்டிலே ''தில் பிளக் கான்ட் சொசய்டி'' எனும் இயக்கத்தின் உறுப்பினராய் இருந்த ஒரு மாணவன் அந்த நாட்டிற்கு வந்திருந்த ஆஸ்திரிய அரசர் பெர்டினன்ட்டையும், அவரது மனைவி அரசி ஸோபியாவையும் 28. 6. 1914 அன்று சுட்டுக்கொன்று விட அதன் காரணமாக ஆரம்பமானதுதான் இந்த உலகப் போர்!

# கம்போடிய சிவில் யுத்தம்;

# தீர்வுக்கு உதவ ஜப். விருப்பு

கம்போடிய சிவில் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான பேச்சு வார்த்தைகளில் உதவ ஜப்பான் விருப்பம் தெரிவித்துள்ளது.

இந்தோனேசியாவுக்கான தனது விஜயத்தின்போது ஜப்பானியப் பிரதமர் திரு. டொசிகி கைபு இதனைத் தெரிவித்தார்.

கம்போடிய பிரதமர் ஹுன் சென் 3 கட்சிக் கெரில்லா கூட்டணியின் தலைவராகக் கருதப்படும் இளவரசர் சியானோம் ஆகியோரிடையிலான பேச்சுவார்த்தைகளை டோக்கியோவில் நடத்தமாத்திரம் சம்மதிப்பதாகக் கூறிய ஜப்பானிய பிரதமர் கம்போடிய உயர் விவகாரங்களில் தலையிடும் வகையில் வேறு நடவடிக்கைகள்எதனையும் மேற்கொள்ள தாம் விரும்பவில்லை என்று கூறினார்.

மேற்படி பேச்சு டோக்கியோவில் எப்போது நடக்கும் என்பதை அவர் கூறவில்லை.

எனினும் ஜூன் முதலாவது வாரத்தில் இப்பேச்சு நடைபெறலாம் என அதிகாரிகள் கூறினர்.

கம்போடிய சிவில் யுத்தம் கடந்தவருடங்களாக நடைபெற்று வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது,

## பங்களாதேஷுக்கு 20 கோடி டாலர் ஜப்பான் நிதியுதவி

பங்களாதேஷுக்கு இருபது கோடி டாலர் உதவியை ஜப்பான் வழங்கவுள்ளது.

தனது பங்களாதேஷ வருகையின்ன் போது ஜப்பானியப் பிரதமமந்திரி திரு. டொஷீக்கி கையு இதனைத் தெரிவித்தார்.

மாணறர்கள் அவரை கொடிகளை அசைத்து வரவேற்றனர்.

வங்களல்தேஷ் ஜனாதிபதி திரு. எஷரத்தையும் அவ சந்தித்து உரையாற்றினார்.

ஜப்பானிய உதவிகளை அதிகரிக்குமாறு பங்களாதேஷ் ஜனாதிபதி இச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொண்டார்.

## பட்டாசு வெடித்து மூவர் பலி!

(சென்னை)

திருச்சியிலுள்ள றாச்சாண்டா திருமலையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பட்டாசு வெடி விபத்தில் மூன்று பேர் உயிரிழந்தார்கள் 15பேர் காயமடைந்தார்கள்.

காயமடைந்த 10 பேரினது நிலைமைகவலைக்கிடமாகஉள்ளதாக தற்போது அங்கிருந்து வரும்செய்திகள் தெரிவிக்கின்றன. வான வேடிக்கைக்காக வாங்கப்பட்ட பட்டாசுகள் தீப் பொறி பட்டு வெடித்ததனாலேயே மேற்படி விபத்து ஏற்பட்டுள்ளது.

### அமைதிப்படை வர...

அதற்குப் பின்னும் நடுவழியிலிருந்த ஆயுதங்கள் அங்கே போய்ச் சேர்ந்தன, தமிழ் நாட்டில் கண்டுபிடிக்கப்பட்ட ஆயுதங்களில் அமைதிப் படையின் நண்பர்களான ஈ. என். டி.எல்.எஃப்.பின் அடையாளங்கள் இருந்தன. அவர்கள் பின்னாளில் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று இந்தியாவுக்கு ஆயுதங்களைத் திருப்பி அனுப்பி இருக்கிறார்கள் என்பதை தர்க்கரீதியாகத் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம்.

கே: மண்டபம் முகாமில் எத்தனை காலம் அகதிளை வைத்திருக்கப் போகிறீர்கள்? அவர்கள் மறுவாழ்வுக்கு என்னென்ன திட்டங்கள் வைத்திருக்கிறீர்கள்?

ப: எல்லா அகதிகளுக்கும் நாம் நிரந்தரமாக அடைக்கலம் கொடுக்கவில்லை. சகஜ நிலைமை திரும்பியவுடன் அவர்கள் கண்டிப்பாகத் திரும்பிப்போய் விடுவார்கள்.


முரசொலி அனுசரணையுடன்
வவுனியா-புதுக்குளம்
சித்திவிநாயகர் விளையாட்டுக்கழகம் நடாத்தும்
12-வது 'வருடாந்த
விளையாட்டுப் போட்டி

115 மைல் சைக்கிள் ஓட்டப்
போட்டிக்குரிய விண்ணப்பம்

முழுப்பெயர்........................................

விலாசம் ........................................

மாவட்டம் ........................................

அதிர்ஷ்ட இலக்கம்........................................

போட்டியால் ஏற்படும் கஷ்ட நஷ்டங்களுக்குக் கழகம் பொறுப்பாளி அல்ல என்பதினை நான் ஏற்றுக் கொள்கின்றேன்.

திகதி          விண்ணப்பதாரியின் ஒப்பம்



கம்பியூட்டர் கல்வி

★ Diploma in Data Processing and Computer Programming in BASIC Language.

ஆரம்பம்: 12 MAY 1990
(சனி, ஞாயிறு வகுப்புக்கள்) நேரம் 1.30 p m

LOTUS 1- 2- 3

ஆரம்பம்: 12 MAY 1990
சனி ஞாயிறு வகுப்புக்கள்

O/L படித்த இருபாலாரும் சேரலாம். மிகவும் விளக்கமான முறையில் பயிற்சி அளிக்கப்படும். பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.




UNIKCO COMPUTER CENTRE
NO 5, Power House Road,
2nd, Lane Jaffna

05059



ஷப்றா - உதயன் நடாத்தும்
தமிழர் பாரம்பரிய
விளையாட்டு விழா

மருதனார் மடத்தில் மாபெரும்
மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி

உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவு
விளையாட்டுக் குழுவினரின் அனுசரணையுடன்
நடக்கும்
காளைகள் சவாரி காண வாரீர்!
மாட்டு வண்டிச் சவாரிப் பிரியர்களுக்கு
நீண்ட இடைவெளியின் பின் மீண்டும்
ஒரு சந்தர்ப்பம்! கண்டு களிக்கத் தவறாதீர்கள்!!

சுன்னாகம் சந்தை மைதானத்தில்
கலைப் பிரியர்களுக்கு கலை விருந்து

ராஜன் இசைக் குழுவினரின்
"இதய கீதங்கள்"
விசேட இன்னிசை நிகழ்ச்சி

காலம்- 10. 5. 1990 வியாழக்கிழமை

நேரம்: மாட்டு வண்டிச் சவாரிப்போட்டி பி.ப.2மணி

கலை நிகழ்ச்சிகள் மாலை 6மணி

05071



இந்துசமய கலாசார அலுவல்கள்
இராஜாங்க அமைச்சரின் அலுவலகம்

தமிழ் நூல்களுக்குப் பரிசளித்தல்

1. பின்வரும் காலங்களில் இலங்கையில் வெளியான தமிழ் நூல்களிற் சிறந்தனவற்றைத் தேர்ந்தெடுத்துப் பரிசு வழங்க எமது இராஜாங்க அமைச்சரின் அலுவலக தமிழ் அலுவல்கள் பிரிவு முடிவவு செய்துள்ளது.

(1) 1981 முதல் 1988 ம் ஆண்டின் முடிவுரையான காலப்பகுதி (இது ஒரு காலப்பகுதியாகக் கருதப்படும்).
(2) 1989-ம் ஆண்டு.

2. கீழ்க்கண்ட துறைசார்ந்த நூல்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படும்.

I நாவல், (ii) சிறுகதை, (iii) நாடகம், (iv) கவிதை, (V) இலக்கியத் திறனாய்வும் விமர்சனமும், (iv சிறுவர் இலக்கியம், (vii) சமூகவியலும் மானிடமும், (viii) அறிவியல் (ix) ஏனையவை.

3. நூல் எழுதியவர் இலங்கையராயிருப்பதோடு நூலும் இலங்கையில் அச்சிடப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

4. இந்துசமய கலாசார இராஜாங்க அமைச்சரின் அலுவலகச் செயலாளர் நியமிக்கும் மதிப்பீட்டாளரின் மதிப்பீடுகளுக்கும், எடுத்துரைகளுக்கும் அமைய பரிசில்கள் வழங்கப்படும். செயலாளரின் முடிவே இறுதியும் முடிவுமானது.

5. மேற்குறித்த காலங்களில் இலங்கையில் தமிழ் நூல்களை எழுதி வெளியிட்ட நூலாசிரியர்களோ, வெளியீட்டாளர்களோ ஒவ்வொரு நூலிலும் ஐந்து பிரதிகளை கீழ்க்காணும் முகவரிக்கு தபாலிலோ,நேரடியாகவோ 21.05.1990க்கு முன்பு கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.
பணிப்பாளர்
தமிழ் அலுவல்கள் பிரிவு,
இந்துசமய கலாசார இராஜாங்க
அமைச்சரின் அலுவலகம்
9வது மாடி, 'றக்ஷண மந்திரய'
21, வொக்ஷால் வீதி, கொழும்பு-02.

6. நூல்களை அனுப்பும் உறையின் இடதுபுற மூலையில் ''தமிழ் நூற் பரிசுத் தேர்வு'' என்ற வாசகம் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

8. இராஜாங்க உமைச்சரின் அலுவலக, தமிழ் அலுவல்கள் பிரிவினால் 1990 ஜூலை மாதத்தில் நடாத்தப்படவுள்ள தமிழ் இலக்கியப்பெரு விழாவில் பரிசுகள் வழங்கப்படும்.

கே. சி. லோகேஸ்வரன்

செயலாளர்
இந்துசமய கலாசார அலுவல்கள்
இராஜாங்க அமைச்சரின் அலுவலகம்

கொழும்பு-02
04.05.1990

05067

## தமிழன் வளர்ச்சி பாரடா

ஆங்கிலத் தமிழ்மொழியின் வளர்ச்சி பாரடா - அது
தமிழனின் நாலில் என்றும் புகழ்ச்சி தானடா
'பக்கச் சைட்டாக நின்று கேட்டுப்பாரடா - நிலையில்
'நடுச் சென்ரர்' வெடித்துவிடும் பேசிப்பாரடா

'லைற்று வெளிச்சத்திலே' வந்துநின்று கேளடா
'பாக்பை' எடுத்து பொறுக்கி அதில் போடடா
'கியூ வரிசை', 'பைப்புக்குழால்', 'லோ சட்டம்' பாரடா
'கடதாசிப் பேப்பரிலே' எழுதியிதை வையடா

'போஸ் ருக்கட்டை'யிலே பிடித்தவனைக் கட்டடா
'பற்றன் பொல்'வெடுத்து மண்டையிலே போடடா
'இலங்கைச்சிலோன்'முழுதும் எடுத்து இதை சொல்லடா
கிளீன் துப்பரவாக' எடுத்துச் சொன்னேன் கேளடா

- மூளாயூர் தவம்

(சகல பாடசாலைகளுக்கான 'தமிழ்த்தினம்' இன்று)

## யாழ்ப்பாண மாவட்ட நிவாரணம்

# 700 லட்சம் ரூபா கேட்டு 300 லட்சம் வந்தது

யாழ் மாவட்டத்தில் நிவாரணம் வழங்குவதற்காக புனர்வாழ்வு அமைச்சிடம் கேட்கப்பட்ட 700 லட்சம் ரூபாவில் 300 லட்சம் ரூபா யாழ் செயலகத்தை வந்தடைந்துள்ளது.

மிகுதி 400 லட்சம் ரூபாவும் இருவாரத்தினுள் இங்கு அனுப்பிவைக்கப்படுமென உறுதியளிக்கப்பட்டுள்ளது.

வந்து சேர்ந்த பணம் பிரிக்கப்பட்டு நிவாரணம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

தொழில் முயற்சிக்கான நன்கொடைக்காக200 லட்சம் ரூபாவும், கடும் பாதிப்படைந்தவர்களுக்கான நிவாரணத் திற்காக 400 லட்சம் ரூபாவும் வீடமைப்புக் கடனுக்காக 100 லட்சம்ரூபாவும் உடன் வழங்குமாறு யாழ். செலகம் புனர்வாழ்வு அமைச்சைக் கேட்டிருந்தது.

யாழ் அரச அதிபர் திரு அன்ரன் அல்பிரட் மேற்கொண்ட முயற்சிகளையடுத்தே இந்த நிதி இங்கு வந்து சேர்ந்துள்ளது. (03)

## ஓமந்தை நாவற்குளம் கிணற்றில் விழுந்த யானையை மீட்க முயற்சி

கிணற்றுள் வீழ்ந்த காட்டு யானையினை மீட்க அரசு அதிகாரிகள் முயற்சியினை மேற்கொண்டுள்ளனர்.

ஓமந்தை நாவற்குளம் என்னுமிடத்தில் காட்டு யானை ஒன்று பாழ் அடைந்த கிணற்றினுள் தவறி வீழ்ந்து கிடக்கின்றது.

சுமார் 3 வயதுமதிக்கத்தக்க இந்த யானையினை மீட்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது என அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வ.தெ.த.பி உதவி அரச அதிபர் திருமதி எமில்டா அற்புதராஜா சம்பவ இடத்திற்கு சென்று நிலைமையினைப்பார்வையிட்டுள்ளார்.

சனி இரவு இந்த யானை கிணற்றுனுள் வீழ்ந்திருக்கலாம் எனக்கருதப்படுகின்றது.

யானையினை மீட்பதற்கு வவுனியாவிலிருந்து அதிகாரிகள் குழு ஒன்று செல்லவுள்ளது என நம்பகரமான வட்டாரங்கள் கூறின. (11)

## விடுதலைப்புலிகளுடன் பேச இந்திய மீனவர் இவ்வார இறுதியில் தலைமன்னார் வருவர்

இலங்கை - இந்திய மீனவர்களிடையே எழுந்துள்ள கசப்புணர்வை நீக்கும் வகையில் இந்திய மீனவர்கள் விவகாரம் தொடர்பாக விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை ஒன்றினை நடத்துவதற்கு இராமேஸ்வர மீனவர் தூதுக்குழு ஒன்று இவ்வார இறுதிக்குள் தலைமன்னார் வரவுள்ளது,

சில மீனவர்கள் இலங்கை கடற் பிராந்தியத்தில் அத்துமீறி நடந்துகொள்வதால் எல்லா மீனவர்களையும் தண்டிக்க முனைவது தவறு என்பதை தமது பேச்சுவார்த்தைகளின் போது விடுதலைப் புலிகளுக்கு இந்திய மீனவர் குழு எடுத்துரைக்கவுள்ளது.

வட பகுதி மீனவர்களும், இராமேஸ்வர மீனவர்களும் எவ்வித பிரச்சினைகளுமின்றி இரு நாடுகளைம் இணைக்கும் கடற்கரைப் பிராந்தியத்தில் இதுவரை காலமும் மீன் பிடித்து வந்துள்ளனர்.

இந்திய கடல் எல்லைக்குள் வடபகுதி மீனவர்கள் மீன் பிடித்து வந்தனர் என இராமேஸ்வர மீன்பிடிச் சங்க சங்க செயலாளர் தெரிவித்துள்ளார். சில இந்திய மீனவர்கள் இலங்கைக் கடல் எல்லைக்குள் நுழைந்ததோடு இலங்கை மீனவர்களையும் தாக்க முற்பட்டபோதே மீனவர் கூட்டிச் செல்லப்பட்டனர் எனவிடுதலைப்புலிகளால் விடுவிக்கப்பட்ட இந்திய மீனவர்களிடம் விடுதலைப் புலிகள் தமது நடவடிக்கைக்கான காரணத்தை தெரிவித்துள்ளனர்,

## தென்மராட்சி கோட்டக்கல்வி அலுவலகம் விரைவில் திறப்பு

தென்மராட்சி கோட்டக் கல்வி அலுவலகத்தைத் திறப்பதற்கான அனுமதி கிடைத்துள்ளதாக யாழ் மாவட்டக் கல்விப் பணிப்பாளர் திரு. இரா.சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

இக்கோட்டக் கல்வி அலுவலகம் இம்மாத இறுதியில் திறக்கப்படவுள்ளது. இவ்வலுவலகத்தின் உதவிக் கல்விப் பணிப்பாளராக திரு.எஸ். தனஞ்செயன் நியமிக்கப்படவுள்ளார்.(03)

## அமைச்சர் லலித் தகவல்

## உள்ளூர் உற்பத்திமதிய உணவிற்கே மதிய உணவுமுத்திரை வழங்கப்படும்

பாடசாலையில் மதிய உணவிற்குப்பதிலாக வழங்கப்படும் உணவு முத்திரையை பயன்படுத்தி மாணவர்கள் அண்மையில் உள்ள கூட்டுறவுக்கடையில் உணவுப்பொருட்கள் அல்லது தமக்கு தேவையான பாடசாலை உபகரணங்களை பெற்றுக்கொள்ள முடியும். இத்தகவலை கல்வியமைச்சர் லலித் அத்துலத்முதலி நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

வீட்டில் இருந்து மதிய உணவைக் கொண்டு வரும் மாணவருக்கு மட்டுமே இந்த முத்திரை விநியோகிக்கப்படும். அத்துடன் கொண்டு வரும் உணவு பாண், பணிஸ் கோதுமைமா கலந்த உணவாக இல்லாது உள்ளூர் வளத்தை பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட உணவாக இருக்க வேண்டும் என்னும் நிபந்தனையின் அடிப்படையிலேயே மாணவருக்கு உணவு முத்திரை வழங்கப்படும்.

இத்திட்டத்தின் மூலம் இது வரை பாடசாலை அதிபர், ஆசிரியர்களிடையே இருந்த சிக்கல்கள் நீங்க வழியேற்படும் எனவும் அமைச்சர் லலித் சுட்டிக்காட்டினார்.

## சங்கானை சாவகச்சேரிக்கு யாழ். அரச அதிபர் நேரடி விஜயம்

யாழ். அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் எதிர்வரும் 14 ஆம் திகதி சாவகச்சேரிப் பகுதிக்கும், 24 ஆம் திகதி சங்கானைப்பகுதிக்கும் நேரடி விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார்.

இவ்விஜயத்தின் போது மேற்படி இடங்களில் இடம் பெறும் புனர்வாழ்வு, அபிவிருத்தி வேலைகளைப் பார்வையிடுவதோடு உதவி அரசாங்க அதிபர்களையும், கிராமசேவை அலுவலகர்களையும், பொதுமக்களையும் சந்திக்கவுள்ளார். (03)

### மாவட்ட...

தெரிஷித்துள்ளார்.

1983 ம் ஆண்டிற்கு முன்னர் நியமனம் பெற்றவர்கள். 5 வருட சேவையை முடித்திருப்பின் யாழ் மாவட்டத்திற்கும், 4 வருட சேவையை முடித்த பின்னர் வேறு மாவட்டத்திற்கும் ஜூன் 1ம் திகதியிலிருந்து இடமாற்றம் பெறுவார் யாழ் மாவட்டத்திலிருந்து வேறு மாவட்டங்களுக்கு இடமாற்றம் கோரிய அனைத்து ஆசிரியர்களும். சேவைக் காலத்தைக் கணக்கில் எடுக்காமலே ஜூன 1 ம் திகதியிலிருந்து இடமாற்றம் செய்யப்படுவார்கள் என்றும் பொதுச் செயலாளர் த. மகாசிவம் தெரிவித்தார்.

மாவட்ட சேவைத் திட்டத்தின் கீழ் நியமனம் பெற்றவர்கள் 5 வருட சேவையை முடித்த பின்வரும் இடமாற்றத்தை உடனடியாக நடத்த முடியாமல் இருப்பதற்கு முக்கிய மான காரணம். கிளிசொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களில் பெரும் தொகையான ஆசிரியர்கள் இடமாற்றம் பெறவேண்டிய சூழ்நிலை ஏற்படுவதானால் பதிலாசிரியர்களை உடன் வழங்க முடியாமற்போய் விடும் என்றும். இதனால் இம்மாவட்ட பிள்ளைகளின் கல்வி பெரும் பாதிப்படைந்து விடும் எனவும் இடமாற்றச் சபை கருத்தில் கொண்டதனாலேயே இவ் விடமாற்றங்கள் இத்தவணை முடிவு வரை பிற்போடப்பட்டுள்ளது எனவும் சங்கத்தின் பொதுச் செயலாளர் தெரிவித்தார்.

## பஸ் நிலையத்தில் குழந்தை

யாழ் பஸ் நிலையத்தில் நேற்று பி.ப 4.15 மணியளவில் ஒரு தாய் தனது குழந்தையைத் தவற விட்டார் பஸ் நேரக் கணிப்பாளர் அந்தக் குழந்தையைத் எடுத்துச் சென்று வர்த்தக விளம்பர ஒலிபரப்பு நிலையத்தில் அனுமதிக்கப்பட்டதை அடுத்து, அவர்கள் விளம்பரப்படுத்தியதன் மூலமாக தகவல் அறிந்த தாய் அந்தக் குழந்தையைப் பெற்றுக் கொண்டார். (04)

### யாழ்...

னையில் எயிட்ஸ் நோயாளிக்குரிய அறிகுறிகள் தென்படுவதில்லை ஆனால் இவரது பரிசோதனையில் எயிட்ஸ் நோய்க்குரிய கூடுதலான அறிகுறிகள் தென்படுவதாகத் தெரியவருகின்றது.

இவர் கொழும்பில் தனியார் நிறுவனம் ஒன்றில் கடமைபுரிபவர் யாழ் தட்டாரதெருப்பகுதியைச் சேர்ந்தவராவர் இவர் உகண்டா நாட்டிற்குச் சென்றுவந்ததாக மேலும் தெரியவருகின்றது.

கடந்த வருடம் ஜனவரி மாதம் யாழ் போதனா வைத்தியசாலையில் எயிட்ஸ் நோயால் இறந்த கரவெட்டி வாசியும் உகண்டா நாட்டில் கடமை புரிந்தார் என்பது தெரிந்ததே.(03)

### பாஸ்போர்ட்

பம் இங்கு அனுப்பப்பட்டுவருகின்றதாம்.

இதன் காரணத்தினால் தான் வெளியிடங்களில் பாஸ்போர்ட் விண்ணப்பங்கள்அதிகவிலையில் விற்பனை செய்யப்படுகின்றன. (03)

### புயலில்...

னால் பராமரிக்கப்பட்டு வருகின்றனர்.

இவர்களின் பெயர் விபரம் வருமாறு; செல்வராஜ் பழனிவேல்(25), சுப்பிரமணியம் அஞ்சப்பன்(20), பக்கிரிசாமி சுப்பிரமணியம்(24), கௌரி ராஜன் செல்வகுமார்(24)

இந்த நான்கு மீனவர்களையும் இந்தியாவுக்கு திருப்பி அனுப்ப விடுதலைப் புலிகள் முயற்சிகளை செய்து வருகின்றனர்.

### சாம் தம்பிமுத்து...

டமை குறிப்பிடத் தக்கது.

சாம்தம்பிமுத்துவுக்கு அரசு போதிய பாதுகாப்பு வழங்கவில்லை எனவும் எனவே இச் கொலையில் அரசுக்கும் பொறுப்பு உண்டு என மாகாண போக்குவரத்து அமைச்சர் அபுயூசுப் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் எஞ்சியுள்ள ஏனைய தமது உறுப்பினர்களுக்கு அரசு பாதுகாப்பு வழங்க வேண்டும் எனவும் இது தொடர்பாக ஓர் பாதுகாப்பு மாநாட்டை கூட்டும் படியும் ஈ.பி.ஆர்.எல்.எப் தற்போது இலங்கை அரசை கேட்டுள்ளது.

சாம் தம்பிமுத்து 1989 இல் பெப்ரவரி மாதம் நடைபெற்ற தேர்தலில் ஈ.பி.ஆர்.எல்.எப் சார்பாக உதயசூரியன் சின்னத்தின் கீழ் போட்டியிட்டு பாராளுமன்ற அங்கத்தவரானார் என்பது தெரிந்ததே.

### உள்ளூராட்சி—

டும்.

அதனையடுத்து அவருக்குரிய மூன்று விருப்புரிமை வாக்குகளையும் அவர் அதே கட்சியில் அவருக்குப் பிடித் மூன்று வேட்பாளருக்குக்கோ அல்லது ஒரே வேட்பாளருக்கோ அளிக்கலாம் உள்ளூராட்சி சபை கான தேர்தல்களில் மாநகரசபைகள், நகர சபைகள்249, பிரதேசசபைகள் என்பனபங்கேற்கவுள்ளன

### சூறாவளி..

சூறாவளி மையம் வடக்கு நோக்கி நகர்ந்து நேற்று இரவு தமிழ் நாட்டு கரையோரத்திற்கு அருகே சென்று கொண்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

எனினும் யாழ் குடாநாட்டின் வட கடலோரம் கொந்தளிப்பு நிறைந்ததாக இருக்கும் எனவும் அறிவிக்கப்படுகிறது.

### அலரிவிதை..

அலரிவிதை உட்கொள்வவற்கு காரணம் அலரி விதை உட்கொண்டவர்களுக்கு மாற்று மருந்துகள் இல்லையென்ற காரணமேயாகும். கடந்த சில தினங்களிற்கு முன்னரும் வேலணை கிழக்கிழக்கில் குடும்பப் பெண் ஒருவர் அலரிவிதை உட்கொண்டு தற்கொலை செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது


## விற்பனைக்கு

பாவிக்கப்பட்ட கூரை ஓடுகள், தேக்கம் கதவுகள், யன்னல்கள், நிலைகள், மரங்கள் என்பன விற்பனைக்கு உண்டு. இவை மீண்டும் பாவிக்கப்படக்கூடிய நல்ல நிலையில் உள்ளன. தொடர்புகொள்ளுங்கள்:

நி. சுரேந்திரன்
இல. 46, முதலாம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

சந்திக்கும் நேரம்: காலை 9 மணிக்கும் 10 மணிக்கும் இடையில். 12. 5. 90 க்குமுன் தொடர்புகொள்ளவும்.

05066


இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ்,[பிறைவேட்]லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாண ஸ்ரான்லி வீதி [illegible] இலக்கத்திலுள்ள அச்சகப் பிரிவில் 08-05-1990ல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது